விலை ரூபா: 7.00
Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- எட்டு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி 27 | ஞாயிற்றுக்கிழமை | (12.09.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 268

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. (முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

## சமாதான முன்னெடுப்புக்களை நகர்த்த
# "தேசிய ஆலோசனை சபை"
# அமைக்க ஜனாதிபதி முடிவு!

### புதிய யோசனைக்கு ஆதரவு பெருகுவதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கும் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான தேசிய ஆலோசனை சபை ஒன்றை அமைக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் யோசனைக்கு தென்னிலங்கையிலும் சர்வ தேச அரங்கிலும் ஆதரவு பெருகி வருவதாக பக்கச் சார்பற்ற அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.**

(08 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய கடற்படை தளபதி இன்று இலங்கை வருகிறார்

(கொழும்பு)

இந்திய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் அருண பிரகாஷ் ஐந்துநாள் விஜயமொன்றை மேற்கொண்டு இன்று இலங்கை வரவுள்ளார்.

இந்தியக் கடற்படைத் தளபதி தனது விஜயத்தின் போது திருகோணமலைக்கு சென்று திருகோணமலை துறைமுகத்தின் பாதுகாப்பு சம்பந்தமாக கடற்படை அதிகாரிகளுடன் ஆராயவுள்ளதுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி மற்றும் கடற்படை அதிகாரிகளையும் சந்தித்து இரு நாடுகளுக்குமிடையிலான கடற்படை ரீதியான ஒத்துழைப்புக் குறித்து கலந்துரையாடவுள்ளார்.

(ம)

# ஜப்பான் தூதுவர் யசூசி அகாஷி அடுத்தவாரம் இலங்கை வருகிறார்!

(கொழும்பு)

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்குடன் ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி அடுத்தவாரம் இலங்கை விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சார்பில் ஜப்பான் சென்ற வெளியுறவுத் துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அங்கு முக்கிய பிரதிநிதிகளை சந்தித்ததுடன் யசூசி அகாஷியைச் சந்தித்து இலங்கைக்கு ஒதுக்கப்பட்ட நிதியை வழங்கும்படி கடுமையான அழுத்தத்தை கொடுத்திருந்தார். இலங்கைக்கு ஒதுக்கப்பட்ட நிதியை, ஜப்பான் தருவதற்கு இணங்கிய நிதியின் ஒரு பகுதியை தருவதற்குக் கொள்கையளவில் இணங்கிய அகாஷி அதற்குப் பதிலாக சமாதானப் பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படுவதற்கான அரச தரப்பு உறுதிப்பாட்டை கோரியிருந்தார்.

நிதியை எப்படியும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்குடன் லக்ஷ்மன் கதிர்காமர் முழுமையான இணக்கம் தெரிவித்ததை இலங்கை அரசின் உத்தியோக பூர்வ பதிலாக எடுத்துக் கொண்ட அகாஷி அடுத்தவார இறுதியில் இது குறித்து நேரடியாக ஆராய இலங்கைக்கு நேரடி விஜயம்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## கனடாவில் பொங்குதமிழ்

(நமது நிருபர்)

எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக் கிழமை, கனடாவில் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு நடைபெறவுள்ளது.

தலைமை, தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை என்பனவற்றை வற்புறுத்தி தமிழர் தாயகத்தில் இருந்து புலம் பெயர்ந்து கனடாவில் வாழ்கின்ற தமிழ் மக்களால் இப் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ரொறன்ரோவில் நடைபெறவுள்ள இப்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## காதல் விவகாரம் சிப்பாய் தற்கொலை!

(வவுனியா)

வவுனியாவில் இராணுவ சிப்பாய் ஒருவர் காதல் விவகாரம் காரணமாக நேற்று அதிகாலை தற்கொலை செய்து கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மன்னார் வீதியில் 5 ஆவது கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பம்பைமடு இராணுவ முகாமில் உள்ள 217 ஆவது படையணியைச் சேர்ந்த விஜயக்கோன் (வயது 27) என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவார்.

தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்ட இராணுவ சிப்பாயின் சடலத்தில் இருந்து காதல் கடிதம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் சடலம் பரிசோதனை செய்யப்பட்டபின் உறவினர்களிடம் சடலத்தை ஒப்படைக்குமாறும் வவுனியா மாவட்ட நீதிபதி வவுனியா பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ம)

## புலிகளின் புல்லுமலை எல்லைக் காவலரணை
# படையினர் தாக்கியமைக்கான ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை
### கண்காணிப்புக் குழுவின் பிரதித்தலைவர் ஹொக்லண்ட்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் புல்லுமலை எல்லைக் காவலரண் மீது படையினர் தாக்குதல் நடத்தியமைக்கான எந்தவிதமான ஆதாரமும் தமக்குக் கிடைக்வில்லையென யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹொக்லண்ட தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் புலிகளின் புல்லுமலை எல்லைக் காவலரண் மீது கடந்த 7 ஆம் திகதி இரவு இடம்பெற்ற தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கண்காணிப்புக் குழுவுக்கு மிகவும் காட்டமான கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

இக் கடிதம் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே ஹொக்லண்ட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

புல்லுமலைத் தாக்குதலில் படையினர் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு உடனடியாகப் பதிலளிக்க முடியாது.

'மைக்' எனப்படும் கண்ணிவெடி அகற்றும் நிறுவன ஊழியர்கள் மட்டுமே சம்பவம் தொடர்பாக உரிய ஆதாரமாக இருக்கிறார்கள்.

எனினும் இச் சம்பவம் தொடர்பாக உரிய விசாரணைகள் இடம்பெறுகின்றன. விசாரணைகள் முடிவில் உரிய பதில் கிடைக்குமென்று தாம் நம்புவதாக ஹொக்லண்ட் கூறினார். (இ-08)

# ஊர்காவற்றுறையில் ஈ.பி.டி.பி உறுப்பினர் சுட்டுக் கொலை!

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் நேற்று மாலை இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஈ.பி.டி.பி உறுப்பினரொருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் எஸ். அருள்தாஸ் (வயது 30) என்ற ஈ.பி.டி.பி உறுப்பினரே மரணமானவராவார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, நேற்று மாலை 7 மணியளவில் ஊர்காவற்றுறை ஈ.பி.டி.பி முகாமைச் சேர்ந்த பிரஸ்தாப நபர் முகாமிற்கு அருகில் உள்ள தனது மாமனார் வீட்டுக்குச் சென்றதாகவும் அப்போது அங்கு சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் மேற்படி நபர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் தெரியவருகின்றது.

இச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(இ-4-5)

## அமெரிக்க தூதரகம் முன்னால் ஹெல உறுமய ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்திற்கு முன்னால் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தை 'ஜாதிக ஹெல உறுமய' ஏற்பாடு செய்திருந்தது. அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டுள்ள திரைப்படம் ஒன்றின் மூலமாக பௌத்த மதத்திற்கு அவதூறு ஏற்பட்டிருப்பதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் சுட்டிக் காட்டினார்கள்.

ஹொலிவூட் புத்தா' எனும் இந்த திரைப்படம் எதிர்வரும் 23ஆம் திகதி திரையிடப்படவுள்ளதாக 'ஜாதிக ஹெல உறுமய' தெரிவிக்கின்றது. இந்த திரைப்படத்தை தடை செய்யுமாறு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் கோரிக்கை விடுத்துள்ளார்கள். (இ)

## பெற்றோர் வீட்டுக் கல்வித் திட்டம்

(சண்டிலிப்பாய்)

கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தினால் பெற்றோர் வீட்டுக் கல்வி என்னும் திட்டம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலும, பிரான் பற்று சனசமூக நிலையத்திலும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு நோர்வே அரசாங்கம் நிதியுதவி வழங்குகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ப- 22)

## இந்தியத் தூதுவருடன் சிறீதரன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிலகு நிருபமாராவ்வை, ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் மத்திய குழு உறுப்பினர் தி. சிறதரன் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நிருபமாராவ்வை கொழும்பில் உள்ள இந்திய தூதுவராலயத்தில் கடந்த புதன்கிழமை சந்தித்துக் கலந்துரையாடிய அவர்,

யுத்தநிறுத்தம் அமுலில் உள்ள இச் சமயத்தில் இடம்பெறும் படுகொலைகள், மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக குறிப்பிட்டதுடன், இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவின் பொறுப்பினையும் வலியுறுத்தியுள்ளதாக ஈ.பி.ஆர்.எல்.எப் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (த-121)

## பயணிகள் சிரமம்

(கோப்பாய்)

உரும்பிராய்-சுன்னாகம், வீதியை இணைக்கும் திலீபன் வீதியின் சில பகுதிகள் ஏற்கனவே திருததப்பட்டிருப்பினும் நடுப்பகுதி நீண்ட நாட்களாகத் திருத்தப்படாத நிலையில் இருந்து வருகிறது.

பாடசாலை மாணவர்கள் உடபட சுன்னாகம் மின்சாரசபைக்குச் செல்வோர், சந்தைக்குச் செல்வோர், கரடுமுரடான இப் பகுதியில் பயணத்தை மேற்கொள்வதில் பலத்த சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர். (ப-79)

## திருட்டு

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள கடையொன்றில் கடந்த திங்களன்று இரவு ஐம்பது ஆயிரம் பெறுமதியான பொருட்களும், கையடக்கத் தொலைபேசி ஒன்றும் களவாடப்பட்டுள்ளன.

திருடர்களைப் பிடிப்ப தற்காக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ப-22)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தென்பகுதி பல்கலைக்கழகங்களில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் அனைத்துபீட யாழ். மாவட்ட மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக் கிழமைகாலை 10 மணியளவில் திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியிலுள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் பேராதனை, மொறட்டுவ, கொழுமபு, றுகுணு, சப்ரமுவ, வயம்ப, ஸ்ரீஜெயவர்த்தனபுர கிழக்கு பல்கலைக்கழகங்களின் அனைத்துப்பீட யாழ். மாவட்ட மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற)

## விவசாயிகள் கோரிக்கை

(இணுவில்)

இணுவில், உடுவில் பகுதிகளில் காணப்படும் விவசாயக் கிணறுகளுக்கு உடனடியாக குளோரின் இடப்படவேண்டுமென இணுவில் கிழக்கு விவசாயிகள் வலிகாமம் தெற்கு பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீண்டகாலமாக இந்தப் பகுதியில காணபபடும் கிணறுகளுக்கு குளோரின் இடப்படவில்லை எனவும், இதனால் தமது பயிர்ச் செய்கையின் மூலம் சிறந்த முறையில் விளைசசலைப் பெறமுடியாமல் இருப்பதாகவும் தெரிவித்தே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ப-122)

## விபத்து

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 9.00 மணிக்கு தட்டாதெருச சந்தியில் ஹயஸ் வான் ஒன்று துவிச் சக்கர வண்டியுடன் மோதியதில் துவிச்சக்கர வண்டிபலத்த சேதமடைந்தது.

துவிச்சக்கர வண்டியில் வந்தவா எதுவித காயமும் இன்றித் தப்பித்துக் கொண்டார். (ப-47)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலர்கள் மற்றும் உதவ அரசாங்க அதிபர்கள் ஆகியோருக்கான கூட்டமொன்று எதிர்வரும் 16ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ் மாவட்ட செயலகத்தில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ற-19)

## நியமனம்

இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த திருமதி தேவநந்தனி பாபு தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் தனது பதவியை கடந்த 3ஆம் திகதி பொறுப்பேற்றுக் கொண்டார். (ப-47)

## தற்காலிக இடமாற்றம்.

(பொன்னாலை)

வலி-மேற்கு பிரதேசசபையின் சங்கானை உப-அலுவலகக் கட்டடம் புனரமைக்கப்படவுள்ளது.

இக்கட்டடத்திற்கான திருத்த வேலைகள் இம்மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் சில நாட்களுக்கு உப - அலுவலகப் பணிகள் அலுவலகததிற்கு அண்மையிலுள்ள வலி. மேற்கு கலாசார மண்டபத்தில் தற்காலிகமாக நடைபெறவுள்ளதென்று வலி. மேற்கு பிரதேசசெயலாளர் திருமதி புஸ்பமலர் சிவலிங்கம் தெரிவித்தார். (ப-49)

## விபத்து

(நல்லூர்)

டொல்பின்ரக வான் ஒன்று முடமாவடிச் சந்திப் பகுதியிலுள்ள மினகம்பத்துடன் மோதியதில் மின்கம்பம் முறிந்து வானின் மேல் விழுந்தது. இதனையடுத்து வான் எரிந்து சேதமடைந்தது. (ப-115)

## சைவநெறிப் போட்டிகள்

(கோப்பாய்)

யாழ். வலயப் பாடசாலைகளுக்கிடையேயான சைவ நெறிப் போட்டிகளைதரம் 3 தொடக்கம் தரம்13 வரையான மாணவர்களிடையே நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பண்ணிசை, சகலகலா வல்லிமாலை, பேச்சு, எழுத்துப் பாட்சை, கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய போட்டிகள் இதில் உள்ளடக்கப்படடுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-79)

## நாளை விடுமுறை

நல்லூர் தேர்த் திருவிழாவை ஒட்டி நாளை திங்கட்கிழமையை விடுமுறை தினமாக யாழ். வணிகா கழகம் அறிவித்துள்ளது. இதற்காக சகல வர்த்தக நிலையங்களையும் பூட்டி வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கும் வண்ணம் சகல வர்த்தகப் பெருமக்களையும் யாழ். வணிகர்கழகம் கேட்டுக்கொண்டுள்ளது. (ப)

## கந்தரோடையில் உற்பத்திநிலையம்

(இணுவில்)

சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் கிராமிய உற்பத்தி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. இதன் கட்டட வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன. உள்ளூர் விவசாய உற்பத்திகளைக் கொள்வனவு செய்து அவ் உறபத்திகளின் பெறுமதியை அதிகரிக்கச் செய்து விநியோகிக்கக்கூடிய உற்பத்திநிலையமாக அபிவிருத்தி செய்யும் திட்டம் எனக் கூறப்படுகிறது. (ப-122)

## வணிக விவசாய குறுவினாப் போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பாடசாலை மாணவர்களிடையேயான வணிக, விவசாய குறுவினாட் போட்டி எதிர்வரும் 18ஆம திகதி சனிக்கிழமை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப் போட்டிக்கு விண்ணப்பித்த மாணவர்களையும் அந்தந்தப் பாடசாலைகளில் வர்த்தகம், விவசாயம கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரையும் சமுகம் தரும்படி தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா கேட்டுக்கொண்டுள்ளார். (ற.29)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்க அமைச்சின் நிதியுதவி மூலம் யாழ் மாவட்டத்தில் செயற்படுத்தப்படும் வேலைத்திட்ட முன்னேற்றம் சம்மந்தமான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை பி.ப 4.00 மணிக்கு யாழ் செயலகத்தில் நடைபெறவுள்ளது.(ப-47)

## அறிக்கைகள் கோரல்

(யாழ்ப்பாணம்)

2004ஆம் ஆண்டிற்கான யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 17ஆம் 18ஆம் திக்திகளில் யாழ்ப்பாண மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளை எதிர்வரும 14ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு சகல திணைக்களத் தலைவர்களையும் அரசாங்க அதிபர் கடிதமூலம்கோரியுள்ளார். (ப-47)

## மகஜர் கையளிப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி சமுர்த்தி மகா சங்க நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் 11பேர் இணைந்து யாழ். மாவட்ட செயலதிபர் மற்றும் சமுர்த்தி உதவி ஆணையாளர்களுக்கு, தென்மராட்சி சமுர்த்தி மகா சங்க முகாமைத்துவா பிரச்சினை தொடர்பான மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

இதன் பிரதிகள் ஜனாதிபதி, சமுர்த்தி அமைச்சர், பிரதி அமைச்சர் உட்பட பல பிரமுகர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ப-29)

## விஷமிகள் தொல்லை

(கோப்பாய்)

இருபாலை - கோண்டாவில் வீதியில இரவு வேளைகளில் நடாமாடுவோரை மோட்டார் சைக்கிளகளில் வரும் இனந்தெரியாத குழுவினர் மிரட்டுவதாக இப்பகுதிக் குடியிருப்பாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்டுகிறது.

இவர்கள் மோட்டார் சைக்கிள்களில் வருவதுடன் குடியிருப்பாளர்களைப் பெயர் கூறி அழைத்து வீண் வம்புக்கு இழுப்பதாகவும் கூறப்படுகின்றது. (ப-79)

## விவசாயிகள் கவனத்திற்கு

(காரைநகர்)

காரைநகர் பிரதேசத்தில் செய்கை பண்ணப்பட்டாத வயல் நிலங்கள் பெறப்பட்டு விவசாயம் செய்ய ஆர்வமுடையவர்களுக்கு வழங்கப்படவுளளதாக காரைநகர் விவசாய சம்மேளனத் தலைவர் வே.சிற்சபேசன் தெரிவித்துள்ளார்.

அதற்காக இம் மாத இறுதிக்குள் விவசாயம் செய்ய ஆர்வமுடைய விவசாயிகளையும் இம் முறை காலபோகத்தின் போது விவசாயம் செய்யாது. தரிசு நிலங்களாக இருக்கும் விவசாய நிலங்களின் உரிமையாளர்களையும் தன்னுடன் தொடர்புகொள்ளுமாறு சம்மேளனத் தலைவர் கேட்டுள்ளார். (ற-246)

## கஞ்சா வைத்திருந்தவருக்கு 18 ஆயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

100 கிராம் கஞ்சா வைத்திருந்த கந்தாமடம மணல்தறை வீதியைச் சேர்ந்த நபரொருவரை மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் கடநத திங்கள்கிழமை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பிரஸ்தாப நபர் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது, இது குறித்து விசாரித்த நீதிபதி, அவருக்கு 15 ஆயிரம் ரூபாவை தண்டப்பணமாகவும், 3ஆயிரம் ரூபாவை யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்பு நிதியத்திற்கு தர்மப் பணமாகவும் செலுத்துமாறும் உத்தரவிட்டார். (ற-5,19)

## வறிய மாணவர்களுக்கு மாணவர் ஒன்றியம் உதவி

(திருநெல்வேலி)

யாழ். கொழும்புத்துறை அரியாலை பகுதியைச் சேர்ந்த வறிய மாணவர்களுக்கு அவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழ் மாணவர் ஒன்றியம் அப்பியாசக் கொப்பிகளை வழங்கியுள்ளது.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து பெரிதும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கே இந்தக் கற்றல் உபகரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்ந்துவருவதனால் தமது கல்வியைத் தொடர்வதில் பல்வேறு சிக்கல்களை மேற்படி மாணவர்கள் எதிர்நோக்கியுள்ள நிலையிலேயே மாணவர் ஒன்றியத்தினால் இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (ற-43)

## இலவச சட்ட உதவி வழங்கும் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யுத்த காலத்தில் இராணுவத்தால் கைதாகிக் காணாமல்போன இளைஞர், யுவதிகள் சார்பாக வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பாக ஆராயும் பொதுக் கூட்டம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபததில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் காணாமல் போனோரின் பெற்றோர் குடும்ப அங்கத்தினருக்கான அமைப்பின தலைமையகத்தின் பிரதிநிதி சாந்த டி பத்திரன சாககிய நாணயக்கார மற்றும் சுரேந்தர டி புலத்சிங்கள ஆகியோர் பங்கு பற்றி விரக்கமளிக்கவுள்ளனர்.

அத்துடன், இதுவரை வழக்குத் தாக்கல் செய்யாதவர்கள் இது குறித்த வழக்கைத் தாக்கல்செய்வது தொடர்பாக இலவச சட்ட உதவிகள், விளக்கங்கள் என்பன வழங்கப்படுவதுடன, யாழ். மாவட்டத்தின் மனித உரிமைகள் சுயாதீன முறைப்பாட்டு நிலையம் தொடர்பாக விளக்கமும் அளிககப்படவுள்ளது.

ஆகவே, இவ் வழக்குகளில் சமபந்தப்பட்டவர்கள் அனைவரையும இக் கூடடத்தில் பங்குபற்றுமாறு சுயாதீன மனித உரிமைக்கான குழுவின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி சிதம்பரம் மோகன் அழைப்பு விடுத்துள்ளார். (ற-5)

## புலிகளின் பகுதியில் இருந்து நெல்லை கொள்வனவு செய்ய அரசு திட்டம்!

வடக்கு - கிழக்கு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து நெல்லைக் கொள்வனவு செய்யும்போது, தென்பகுதியை விட அதிக விலைக்கு கொள்வனவு செய்யப்படும் என விவசாய அமைசசா் அனுர குமாரதிஸாநாயக்க தெரிவித்தார்.

இந்த நடைமுறை அடுத்த வருட நெல்கொள்முதலின் போது கடைபபிடிக்கப்படும் என்றும் அமைச்சர் அனுர குமார திஸாநாயக்க குறிப்பிட்டார்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மற்றும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி எல்லைகளில் உள்ள விவசாயிகளுக்கான உரமானியத்தை அதிகரிக்கவும் தாம் திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இப்பகுதிகளில்வாழும் விவசாயிகளுக்கு விசேட கவனம் செலுத்தப் படல் வேண்டும்.

இந் நிலையில், தென்பகுதி விவசாயிகளிடம் நெல்லைக் கொள்வனவு செயயும் விலைக்கே இப்பகுதி விவசாயிகளிடம நெல்லைக் கொள்வனவு செய்தால் அது அவர்களுக்கு இழைகக்கும் அநீதியாகும் எனவேதான், அடுத்த வருடம்முதல் அதிக விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்ய திடடமிட்டுள்ளோம் எனவும் அமைச்சர் அனுர குமார திஸநாயக்க மேலும குறிப்பிட்டுள்ளார். (யே)

## முகவர் நிலையத்தை நடாத்திவந்த மோசடி நபர் தலைமறைவு

(கொழும்பு)

புருண்டி நாட்டில் வேலை வாய்ப்பைப் பெற்றுத் தருவதாகக் கூறி மட்டக்களப்பைச் சேர்ந்த இளைஞர்களிடம பெருமளவு பணததை மோசடி செய்த வெளிநாட்டு முகவர் நிலைய மொன்றை நடத்தி வந்த நபர் ஒருவர் அப் பணத்துடன் தலைமறைவாகியுள்ளார்.

வந்தாறுமூலை, சிந்தாண்டி, மாவடிவேம்பு கொம்மாந்துறை மற்றும் ஏறாவூர் ஆகிய பகுதியைச் சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு ஏமாற்றப்பட்டவர்களாவர்.

அதைவிட, இவ் இளைஞர்களிடம மருத்துவ சான்றிதழ் பெற்றுத தருவதாகக் கூறி ஒவ்வொருவரிடமிருந்தும் தலா 5 ஆயிரம் ரூபாவும் மேற்படி மோசடி நபரால் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கணடியைச் சேர்ந்த சுந்தரம் சிவனேசன என்ற நபரே 'வைட் போர்ஸ இன்ர நெஷனல் பிறைவேட்' எனும் பெயரில் இவ் வெளிநாட்டு முகவர் நிலையத்தை நடத்திவந்ததாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. (ற-8)

## வருடாந்த ஒன்றுகூடல்

சிறுவருக்கான அபிவிருத்தி நிலையத்தின் சிறுவருக்கு உதவும் திட்டத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மில்க்வைற் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத்தின் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ. சிவசுவாமி பிரதம விருந்தினராகவும், வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் க. கணேசபிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் திட்டத்தில் இருக்கும் சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளதாக நிலையத்தின செயலாளர் பா. பாலதயானந்தன் தெரிவித்துள்ளார். (ற-16)

# நல்லூரான் திருவடிக்கு



## இருபத்திமூன்றாம் திருவிழா

### சட்டிக்கு முன்னே சமாதானத் தீர்வைத்தா தா

கேடு கெட்ட போரினாலே நாட்டைவிட்டு ஓடி அங்கு
பாடுபட்டுழைத்தோடும் பவுடரால் சேர்த்தாரும்
தேடிவந்த உன்னைக்கண்டு திருவருளேதந்தென்று
கூடிநின்று கும்பிடுவோர் கூட்டங் கண்டேன் நல்லையிலே

பட்டது மறந்துபோச்சு பழிசெல்லாந தொலைந்து போச்சு மாட்டிலா
மகிழ்ச்சி பொங்க மனிதமே மறையலாச்சு
கிட்டுது பேரழிவு கிழக்கிலே தெரிகிறது
சட்டிக்கு முன்னே இங்கே சமாதானத் தீர்வைத்தா

கவிமணி அன்னை தாஸன்

## விண் மீன்

வீதியிலேயே சம்பரத்தின் முடிதடவும் விண் மீனை
வீதியிலே சன வெள்ளம் உன்னைக்காண தளம்புமே
ஓதிவரும் மக்களது ஒலி வாளைப் பிழந்திடுமே
நாதியற்ற எங்களுக்கு நல்வாழ்வு தந்திடையா

உமாமகேஷ்வரன் சர்வதேச முதலீடும்
மனிதவள ஆலோசகரும் W.T.O
த.பொ.1603, கொழும்பு.

## நல்லைநகர் புரிவாய் நாளிலெம் போற்ற!

இராகம்:நாட்ஸடக்குறிஞ்சி தாளம்:ஆதி

பல்லவி

பலியுக வரா கந்தா முருகா
கலிகொளவைக்கும் போர் தொலையாதோ?
கலியுக வரதா....

அனுபல்லவி

திரிபுரம் எனித்த எம் விசனின் மைந்தா!
பரிவுடன் எம்மைப் பாருமையா!
காலியுக வரதா...

சரணம

திருவருள் தந்திடும் மலைமகள் மைந்தா!
கருமுகில் எம்மை சூழ்ந்து கௌவுதையா!
பெருமனம் வைத்து வருவாய் கந்தா- உன்
அருளில்லை என்றால் ஆவதென்ன?
காலியுக வரதா....

க.நா.பாலசுப்பிரமணியம்

## உன் புகழ் பாடிடுவோம்

நல்லையில் எழுந்தருளும்
செல்வத் திருமுருகா!
தொல்லைகள் களைந்திட
வந்திடுவாய் ஐயா!
எல்லையில்லாப் பேரழகா!
வல்வினைகள் நீங்கிடவே;
புள்ளிமயில் மீதிவர்ந்து
இரட்சிப்பாய் ஐயனே!

செந்தமிழ்த் தெய்வமே!
பன்னிரு கரத்தானே
தீத்திக்கும் தீந்தமிழால்
உன் புகழ் பாடிடுவோம;
எத்திக்கும் உன் நாமம்
ஓங்கி ஒலிக்குதையா!

ப.கனகசிங்கம் கவிஞர்யாழேன்
4ம் குறுக்குத்தெரு

## வாழ அருள்வாய் வடிவேலா

மனிதர் சுட்டு மனிதர்கள்
மடிதல் நல்ல வழக்காமோ?
இனிதே வாழ்வில் ஈடேறி
எல்லா நலமும் உரையாராய்
மனிதம் பேணி மனிதர்கள்
வாழ அருள்வாய் வடிவேலா
புனிதப் பதியாம் நல்லூரில்
பொலியும் கந்தப் பெருமானே!

வ.சின்னப்பா

## நினைவு தினம் அனுட்டிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர் பொன் சிவபாலனின் 6ஆம் ஆண்டு நினைவு தினம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் நேற்றுக்காலை அலுவலக நிர்வாகப் பொறுப்பாளர் செல்லையா விஜயரட்ணம் தலைமையில் அனுட்டிக்கப்பட்டது. (ந)

யாழ்ப்பாணத்தில்
6th months
M. M. I. C
20% கழிவு
வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை
சார் தபால் மூலம் கற்கை நெறி
Diploma in massmedia
Dip. in. m. m. (srilanka) சான்றிதழ்
இல.15, சிறாம்பியடி ஒழுங்கை, ஸ்ரான்லிறோட்,
யாழ்ப்பாணம்.
(C/443) Call:- 0777 316258

# அரச ஊழியர்களுக்கு உடனடியாக மேலதிக கொடுப்பனவை வழங்குங்கள்

## அரச சேவையாளர் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

முறையான சம்பள உயர்வுத்திட்டத்தை அரசாங்கம் அமுல்ப்படுத்தும் வரை அரச சேவையாளர்களுக்கு உடனடியாக 3 ஆயிரம் ரூபாவை மேலதிக கொடுப்பனவாக வழங்குமாறு அரச சேவையாளர் சங்கப் பேச்சாளர் டபிள்யூ எஸ்.பியதாஸ, நிதி அமைச்சர் சரத் அமுனுகமவை கடித மூலம் கோரியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதால், வாழ்க்கைச் செலவும் பெருமளவு அதிகரித்துள்ளது இதனால் அதனை அரச ஊழியர்கள் சமாளிக்க முடியாது திணறுகின்றார்கள்.

இதற்கிடையில் வரவு செலவுத் திட்டததின் மூலமாக அரச ஊழியர் களுககு 70 சதவீதத்திற்கும் அதிகமான சம்பள அதிகரிப்பை வழங்க வேண்டும் என திஸ்ஸ தெய்வேநதிர ஆணைக்குழு ஏற்கனவே சிபார்சு செய்திருந்தது.

ஆனால், 2002 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட இத்தகைய சிபார்சு இது வரை அமுல்செய்யப்படவில்லை என்றுள்ளது.

இதேவேளை, அரச ஊழியர் களுக்கு விரைவில் சம்பள அதிகரிப்பு பெற்றுக்கொடுக்கப்படும என அரசாங்கம் உறுதியளித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# போலி லைசென்ஸ் வைத்திருந்த நபருக்கு 2 வருட கடூழியச்சிறை

(யாழ்ப்பாணம்)

போலி சாரதிப் பத்திரத்துடன், வாகனம் செலுத்திய நபரொருவருக்கு யாழ்.மாவட்ட நீதிமன்றம் இரு வருட கடூழியச்சிறைத்தண்டனை விதித்துள்ளது. போலி ஆவணத்துடன் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின பேரில் கந்தர்மடம் ஆத்திசூடிப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த பிரஸ்தாப நபர் கடந்த மே மாதம் 20ஆம் திகதி கோப்பாய் பொலிஸாரல் கைது செய்யபட்டு யாழ். மாவட்ட நீதிமன்றில் ஆஜர் படுத்தப பட்டார். இதன்போது இவரது வழக்கு கடந்த 8 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டது.

இந்நிலையிலேயே, கடந்த புதன கிழமை இவரது வழக்கு நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன போது பிரஸ்தாப நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து, இவருக்கு 2 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அத்துடன், பிரஸ்தாப நபரின் கைவரல் அடையாளத்தைப் பெற்று, தீர்ப்பு விபரத்துடன் கைவிரல் அடையாளம் பதிவாளருக்கு அனுப்பிவைக்குமாறு நீதிமன்றப் பொலிஸாருக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளதையும் குறிப்பிடத்தக்கது. (ந-19)

# ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு வன்னியில் தொடர்ந்தும் பற்றாக்குறை

## தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர்

(கிளிநொச்சி)

வனனிப்பகுதிப் பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை கடந்த 30 ஆண்டு காலமாகத் தொடர்ந்தும் நிலவிவருகினறது என தமிழீழ விடுதலைப் புலிகளின் கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

மாகாண ஆசிரிய நிலையங்கள இணைந்து நடாத்திய ஆசிரியர் வாண்மை விருத்தி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கடந்த 1970 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தமிழர் கல்வியானது உயர்ந்த நிலையில் இருந்த நிலை மாறி, தற்போது ஆசிரியர் பற்றாக்குறை என்ற நிலை உருவாகி, கல்வியானது கீழ்நிலையை நோக்கிச் சென்று கொணடிருப்பதைக்காண முடிகின்றது.

இன்று பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுவோரின் புள்ளிவிபரங்களை எடுத்துக் கொண்டால், திறமை அடிப்படையில் பல்கலைக் கழகததிற்கு செல்வோரின் தொகை கலைத் துறையாக இருந்தாலும், முகாமைத்துவத் துறையாக இருந்தாலும் மிகக் குறைவாகவே காணப் படுகின்றது.

தமிழீழ தாயகப் பகுதியில் ஆசிரியர் பற்றாக்குறை என்பது தொடர்ந்த வணணமே உள்ளது. இப்பகுதியில ஆசிரியர் பற்றாக்குறை இருந்து வரும நிலையிலே, இவ்வாறான ஆசிரிய வாண்மை விருத்திச் செயறபாடுகள் இடம்பெறுவதென்பது மிகவும் அவசியமானதாகும்.

கடந்த 30 ஆண்டுகளாக ஆரம பக்கல்வி ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை தொடர்ந்தும் நிலவிவருகின்றது. இந்நிலையில், இதுவரை காலமும் எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகப் பணியாற்றிய ஆசிரியர்கள் அனைவரும் தொடர்ந்தும சேவையாற்ற வேண்டும் எனத் தெரிவித்தார். (ந-121)

# இலங்கை – இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் ஒக்டோபர் மாத இறுதியில் கைச்சாத்து

(கொழும்பு)

இந்தியாவுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை ஒப்பந்தமொன்று அடுத்தமாத இறுதியில் கைச்சாத்திடப்படுமென பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்த உடன்படிக்கையுடன் தொடர்புடைய பல்வேறு நடவடிக்கைகள பூர்த்தியடைந்துள்ளன. இந்த உடன படிக்கையில் இருநாட்டு இராணுவப் பயிற்சி புலனாய்வுத் தகவல்கள் மற்றும் கடற்படைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகியன உட்பட பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப் படுகின்றன.

இந்த உடன்படிக்கை தொடர்பான பூர்வாங்க அறிக்கை இரு நாடுகளுக்குமிடையில் பரிமாறப்பட்டுளளது. இதனைத் தொடர்ந்து இவ் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து பேச்சு வார்த்தை நடாத்துவதற்காக இந்தியப் பிரதிநிதிகள் குழுவொன்று அடுத்த மாதம் இலங்கை வரவுள் ளது.

எனவே, இக்குழு இலங்கை வந்து இதுவிடயம் குறித்து விரிவாக ஆராய்ந்த பின்னர் அடுத்த மாத இறுதியில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படுமென பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத மேலும் தெரிவித்துள்ளார். (ந-8)

# அகதிகள் அனைவரும் சொந்த இடத்திற்கு அனுப்பி வைப்பு

(திருநெல்வேலி)

இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்டு கைவிடப்பட்ட நிலையில் கச்சதீவிலிருந்து நெடுந்தீவுக்கு அழைத்து வரப்பட்ட 28 ஈழ அகதிகளும் நேற்றைய தினம் காலை யாழ். செயலகத்தில் ஊர்காவற்றுறை அரசாங்க அதிபரால் கையளிக்கப்பட்டனர்.

மேற்படி, ஈழ அகதிகள் அனைவரும் தத்தமது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கென யாழ். செயலகத்தினால் தனியார் ஒவ்வொருவருக்கும் தலா 500 ரூபாவும், குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் தலா ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டு இவர்கள் அனைவரும் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ந-4?)

## இன்று ஒரு தகவல்

# நீதி விசாரணை

மனுநீதிச் சோழன் வரலாறு நமக்குத் தெரியும். அதுபோல் நீதி தவறாத ஆட்சியாளர்கள் பலபேர் இருந்திருக்கிறார்கள் இந்த உலகத்தில். ஹஸரத் உமர் பின் கத்தாப் (ரலி) என்று ஒருவர். இஸ்லாத்தின் இரண்டாவது கலிபா இவர். இவரது ஆட்சிக் காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி.

அந்த மன்னருக்கு ஒரு மகன். அவரது பெயர் அபூ ஷஹ்மா. அந்த மிசர் நாட்டு கவர்னர் அமர்பின் ஆஸ் (ரலி) அந்த மன்னரது மகன் கவர்னர் அவர்களுடைய கவனிப்பில் இருந்தார். அந்த சமயத்தில் ஒருநாள் அவர் மதுபானம் அருந்தினார். கவர்னருக்கு இது தெரிந்து விட்டது. என்ன செய்வது? அவருக்கு மிகவும் சங்கடமாகிவிட்டது. தவறு செய்தது மன்னனின் மகன். கவர்னர் யோசனை செய்தார். அவரை மெதுவாகத் தனது வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்தார். அதிகமாக அவரைக் கஷ்டப் படுத்தாமல் ஒரு சிறிய தண்டனையைக் கொடுத்துப் பிரச்சினையைத் தீர்த்து விட்டார். ஏதோ பேருக்கு ஒரு தண்டனை அவ்வளவு தான்.

இது நடந்து கொஞ்ச நாட்கள் கழித்து மன்னருக்கு இந்த விடயம் தெரிய வந்தது. தனது மகன் என்பதனால் கவர்னர் லேசான தண்டனையுடன் விட்டு விட்டார் என்பதைப் புரிந்து கொண்டார். உடனே கவர்னருக்குத் தகவல் அனுப்பினார். "அமர்வின் ஆஸ் அவர்களே! எனது மகன் மதுபானம் அருந்தியிருக்கிறான். அது உங்களுக்குத் தெரிந்தவுடன் தண்டனை நிறைவேற்றியிருக்கிறீர்கள்.

கலீபாவின் மகன் என்ற காரணத்தினால் குறைவான தண்டனையைக் கொடுத்ததாகக் கேள்விப்படுகிறேன். இது ஷரீஅத்தின் படி மாபெரும் குற்றம். உங்களுடைய நடத்தையும் மன்னிக்கக் கூடியதல்ல. இந்தக் கடிதம் கண்டவுடனே மகன் ஆபூஷஹ்மாவை மதீனாவுக்கு அனுப்பி வைக்க வேண்டியது என்று கடிதம் எழுதினார்.

அதைப் பார்த்த கவர்னரும் உடனே கலீபாவின் மகனை மதீனாவுக்கு அனுப்பி வைத்தார். மன்னர் முன் நீதி விசாரணை நடந்தது. அதன் படி தனது மகனுக்கு சவுககடி வழங்கும் படி உத்தரவிட்டார். ஹஜரத் உமர்கத்தாப்.

தண்டனை நிறைவேற்றப்பட்டது. கூடியிருந்த எல்லோரும் "ஐயா கொஞ்சம் கருணை காட்டுங்கள்" என்று மன்னரிடம் வேண்டிக் கொண்டார்கள். அந்த வேணடுகோளை மன்னர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் சொன்னார் "நீதியின் முன்னால் தந்தை மகன் அனபு, நேசம், உறவுமுறைகளையெல்லாம் கவனிக்க முடி யாது. குற்றம் செய்தவர் தண்டிக்கப்பட வேண்டியவர். அவர் யாராக இருந்தாலும் சரி" என்றார்.

எல்லா ஆட்சியாளர்களுமே கவனிக்க வேண்டிய ஒரு செய்தி இது. அரசாங்க அதிகாரி ஒருவர் இருந்தார். அவர் ஒருநாள் தனது அரசாங்கக் கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்த சமயத்தில் அவரைப் பார்க்க ஒரு பெரிய மனிதர் வந்தார். இவர் தனது சொந்த வேலை காரணமாக வந்துள்ளதைப் புரிந்து கொண்டார். உடனே அதுவரையில் எரிந்து கொண்டிருந்த விளக்கை அணைத்து விட்டு இன்னுமொரு விளக்கை ஏற்றி வைத்து விட்டார்.

இந்தச் செயலுக்கு என்ன காரணம் என்று கேட்டார். இதற்கு அவர் சொன்னார் "ஐயா நீங்கள் வந்த போது இங்கே எரிந்து கொண்டிருந்தது அரசாங்க விளக்கு. இப்போது எரிவது சொந்த விளக்கு. சொந்த விஷயங்களைப் பேசும் போது அரசாங்கப் பணத்தைச் செலவு செய்யக் கூடாதல்லவா? அதனால் தான் விளக்கை மாற்றினேன்" என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# வடக்கு–கிழக்கை முஸ்லிம்களினதும் தாயகமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்

## உம்மா கட்சித் தலைவர் வலியுறுத்து

(மட்டக்களப்பு)

தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளுக்குக் குறுக்காக நிற்கப் போவதில்லை என புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஐக்கிய முஸ்லிம் மக்கள் கூட்டணி உம்மாக் கட்சி தெரிவித்துள்ளது.

முஸ்லிம்களின் சமூகப் பொருளாதார மத கலாசார நலன்களை உறுதிப்படுத்தும் வகையில் இணைந்த வடக்கு- கிழக்கு மாகாணத்துள் தீர்வு காணப்படவேண்டும் என்பதையும் அக்கட்சி ஏற்றுக் கொண்டுள்ளது.

கொழும்பில் கடந்த 8ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்ட இக்கட்சி தனது ஆரம்ப விழாவை அடுத்து கட்சியின் முதலாவது ஊடகவியலாளர் மாநாட்டினையும் நடாத்தியுள்ளது.

இவ் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட கட்சியின் தலைவர் கலாநிதி ஏ.எல்.எம். ஜஸீன், வடக்கு- கிழக்கு பிரதேசம் முஸ்லிம்களினதும் தாயகப் பிரதேசமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அத்துடன் இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வு காணப்படும் போது வடக்கு-கிழக்கில் முஸ்லிம்கள் சுய கௌரவத்துடன் வாழக்கூடிய வகையில் தீர்வு வழங்கப்பட வேண்டும். சமாதானப் பேச்சுவார்த்தை இடைநிறுத்தப்பட்ட இடத்தில் இருந்து மீண்டும் தொடரப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும்.

அரசாங்கத்துக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம்பெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தனியான முஸ்லிம்கள் குழுவொன்றினை நாம் நியமிப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்.

சகல முஸ்லிம் கட்சிகளையும் தம்முடன் இணைக்கும வகையில் எதிர்கால அரசியல் செயல்திட்டங்களை அனைத்து முஸ்லிம் கட்சிகளுக்கும் அனுப்பிவைக்கவுள்ளோம். ஒரு மாதகாலத்திற்குள் இதுதொடர்பாக ஏனைய முஸ்லிம் கட்சிகள் பதிலளிக்கத் தவறினால் எமது கொள்கையை நோக்கி உம்மா கட்சி தனியாகப் பயணிக்கும்.

எமது கட்சியின் அரசியல் யாப்பினை கவனத்தில் எடுத்து அதன்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் யாப்பினை மாற்றியமைக்குமாறு முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமிடம் கோரவுள்ளோம்.

இது சாத்தியமாகாவிடின், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைக் கலைத்துவிட்டு எமது கட்சியுடன் வந்து இணையுமாறு கேட்கவுள்ளோம் எனவும் உம்மா கட்சியின் தலைவர் ஏ.எல்.எம். ஜஸீன் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ரு-121)

# வெளிநாட்டவரின் கணனி அறிவை ஒத்த வளர்ச்சியை தமிழர்களும் பெற வேண்டும்

## பொருண்மிய மதியுரையகப் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

(திருகோணமலை)

தமிழீழத் தேசியத் தலைவரின் எண்ணப்படி எமது தாயகத்தில் உள்ள தமிழ்மக்கள் அனைவரும் ஏனைய பகுதிகளிலும் வெளிநாடுகளிலும் உள்ள மக்களின் கணனி அறிவினைப்பெற வேண்டும்.

அத்துடன், கணனித் துறையில் எமது மக்கள் வளர்ச்சி பெற வேண்டும்என பொருண்மிய மதியுரையகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் என்.சுந்தரமூர்த்தி தெரிவித்துள்ளார்.

பொருண்மிய மதியுரையகம் தமிழர் தாயகத்தில் 50 கணனிப் பயிற்சி நிலையங்களை திறந்து வைக்கவுள்ளது.

இததிட்டத்தின் அடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கிழக்குப் பிரதேசத்திலுள்ள கட்டைபறிச்சான் விபுலாநந்தர் வித்தியாலயத்தில் கணனிப் பயிற்சி நிலையம் ஒன்று கடந்த வியாழக்கிழமை காலை 9 மணிக்கு திறந்துவைக்கப்பட்டது. அங்கு கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதைனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் பேசுகையில்,

எமது நிறுவனம் 12 நாடுகளின் கிளைகளைக கொண்ட சர்வதேச தொண்டர் நிறுவனமாக இயங்குகின்றது. இது அமெரிக்கா, பிரித்தானியா, நோர்வே போன்றவற்றில் அந் நாடுகளின் சட்டதிட்டங்களுக்கு அமைவாகத் தொழிற்படும் ஒரு தொண்டர் நிறுவனமாகவே செயற்பட்டு வருகிறது.

எம்மால் 5 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மாணவர்களுக்கு கணனிக் கல்வி, ஆங்கில அறிவு வருத்தி மற்றும தொழில் நுட்பத் திறன் என்பவற்றை வளர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனத்தெரிவித்தார். (ரு-121

# இராசி பலன்

12.09.2004

(ஆவணி 27, ஞாயிற்றுக்கிழமை)

திரியோதசி முன்னிரவு 7.51 மணிவரை

ஆயிலியம் பி.ப. 4.22 மணி வரை

இராகுகாலம் 4.33 - 6.03 மணி வரை

சுபநேரம் 9.03-10.33 மணிவரை

பிரதோஷ விரதம், 4வது ஆவணி ஞாயிறு

**மேடம்**
மனக்கிலேசம், மாதாசுகம், காரிய தாமதம், ஆரோக்கியம் குறைவு.

**இடபம்**
குடும்ப மகிழ்ச்சி, புதிய முயற்சி, எடுத்த கருமங்கள் கைகூடும், பிரயாணநன்மை.

**மிதுனம்**
நண்பர்கள் விவாதம், கௌரவக் குறைவு, கற்பனை பகுதி, முயற்சி தாமதம்.

**கடகம்**
தேக நலன், தொழில் நன்மை, காரிய சித்தி, கலந்துரையாடல்.

**சிங்கம்**
எடுத்த கருமங்கள் தாமதமாகும், பணவிரயம் சயனக்குறைவு, சத்துருஜெயம்.

**கன்னி**
புதிய விடயம், உறவினர் சந்திப்பு, நன்மை, போசனசுகம்.

**துலாம்**
புதிய திருப்பம், தொழில் நன்மை, சித்தி, நல்ல செய்தி.

**விருச்சிகம்**
பிரயாணம், புதிய திட்டம், பித்தரோகம், காரிய தாமதம்.

**தனுசு**
மனக்குழப்பம், எதிர்பாரத நன்மை, முயற்சி தாமதம், நண்பர்கள் சந்திப்பு.

**மகரம்**
காரிய அனுகூலம், உறவினர் உதவி, செளபாக்கியம், தெய்வதரிசனம்.

**கும்பம்**
சிறுவியாதி, உற்சாகம், தனவிரயம், விருந்து பசாரம், பெரியோர் வெறுப்பு.

**மீனம்**
பெரியோர் வெறுப்பு, முயற்சி தாமதம், வியாபார சிந்தை , வேலைப்பழு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# கைதான காவல் துறையினர் இருவரும் விளக்கமறியலில்

(திருகோணமலை)

கடந்த புதன்கிழமை மூதூர், இருதயபுரத்தில் வைத்து படையினரால் கைதுசெய்யப்பட்ட 2தமிழீழக் காவல்துறை உறுப்பினர்களும் கடநத வியாழக்கிழமை திரு கோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இவர்கள் இருவரையும் நீதிவான் எதிர்வரும் 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

தற்போது இவர்கள் இருவரும் திருகோணமலை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள் ளனர்.

இவர்களைப் பார்வையிடுவதற்குச் சென்ற தமிழீழ காவல்துறையின் திருகோணமலை கண்காணிப்பாளர் சிரஞ்சீவியை சிறைச்சாலை அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. திருகோணமலை அரசியல்துறை உறுப்பினர் ஒருவர் மாத்திரம் மேறபடி இருவரையும் பார்வையிட அனுமதிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. (யே)

# மனித உரிமை மீறப்பட்டுள்ளது

## அப்துல் காதர் மனுத் தாக்கல்

(கொழும்பு)

மோசடிக் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் அப்துல்காதர் தமது அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டி உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல்செய்துள்ளார்.

பொலிஸார் தம்மைக் கைதுசெய்ய வந்தபோது தவறான முறையைக் கையாண்டதுடன் சட்டவிரோதமான முறையில் தடுத்து வைத்திருந்ததாகவும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் நீதிமன்ற உத்தரவின்றி கைது செய்து தம்மை தடுத்து வைத்துள்ளமையானது சட்டவிரோதமானது என்று அப்துல் காதர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள அப்துல் காதர் ஒரு மில்லியன் ரூபாவினை நட்டஈடாகப் பெற்றுத்தருமாறும் நீதிமன்றைக் கோரியுள்ளார்.

அம்மனுவில் ஊழல் விசாரணைப் பிரிவில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சி.ஈ.வெதசிங்க், பொலிஸ் பரிசோதகர் றூவான் குணசேகர உட்பட மேலும் பலர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். (ச-8)

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளப்பெறுவோர் -2004

**மீளளிப்பு நடைமுறைகள்:**

1.கடன் சான்றிதழாளர் நேரடியாக வருகை தந்து கடனை மீளப்பெற வேண்டும்

2ஒருவர் சார்பில் மற்றொருவர் கடனைச் செலுத்தியிருப்பின் இருவரும் வருகைதரவேண்டும்.

3.கடன் சான்றிதழாளர் இறந்திருப்பின் பின்வரும் ஆவணங்களைப் பின்னுரித்தாளர் கொண்டுவரவேண்டும்.

- *இறப்புச் சான்றிதழ்*
- *இறப்புச் சான்றிதழின் படி (பிரதி)*
- *கடன் சான்றிதழ்*
- *பின்னுரித்தாளரின் அடையாள ஆவணம்*
- *பின்னுரித்தாளரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவையாளரின் கடிதம்.*

4.கடன சான்றிதழிலுள்ள முழுப்பெயரும் அடையாள ஆவணத்திலுள்ள முழுப்பெயரும் வேறுபடுமிடத்து இரண்டு பெயர்களும் ஒருவரையே குறிக்கின்றதென்பதை உறுதிப்படுத்தி கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்.

5.அ).மீளளிப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் சான்றிதழாளர் தமது அடையாள ஆவணத்தைக் காண்பித்தே கடனை மீளப்பெறமுடியும் ஆ).அடையாள ஆவணம் அற்றவர் தமது புகைப்படத்தின் (2.5 அங்2.0அங் அளவு) பின்புறத்தில் தமது பெயர், முகவரி, கையொப்பம ஆகியவற்றை உதவி அரசாங்க அதிபரால் உறுதிப்படுத்திக் கையளிப்பின் அது ஏற்றுக்கொள்ளப்படும்.

## உடுவில் உதவி அரச அதிபர் பிரிவு

| | |
|---|---|
| 199.யா/உ/6334 | திரு. கந்தையா தர்மலிங்கம் |
| 200.யா/உ/6339 | திருமதி. இரஞ்சிதமலர் தில்லையம்பலம் |
| 201.யா/உ/6375 | திருமதி. நமசிவாயம் தனலட்சுமி |
| 202.யா/உ/6416 | திரு. கனகசபை இராசரத்தினம் |
| 203.யா/உ/6448 | திருமதி. அன்னலட்சுமி நவரத்தினம் |
| 204.யா/உ/6493 | திருமதி. செல்லம்மா தம்பிராசா |
| 205.யா/உ/6602 | திரு. இராமபிள்ளை சுப்பையா |
| 206.யா/உ/6662 | செல்வி. கவிதா மாணிக்கராசா |
| 207.யா/உ/6667 | திரு. கந்தையா சின்னத்துரை |
| 208.யா/உ/6670 | திரு. முருகேசு சண்முகநாதன் |
| 209.யா/உ/6720 | திரு. காசியர் இளையதம்பி |
| 210.யா/உ/6733 | திரு. பொன்னுத்துரை ஜெகநாதன் |
| 211.யா/உ/6769 | திரு. சின்னட்டியார் சீனி |
| 212.யா/உ/6795 | திரு. விஸ்வலிங்கம் சிவசுப்ரமணியம், |
| 213.யா/உ/6798 | திருமதி. நேசமலர் சிதம்பரநாதன் |
| 214.யா/உ/6832 | திரு. கந்தையா கந்தசாமி |
| 215.யா/உ/6886 | திரு. குமாரு கந்தையா |
| 216.யா/உ/6947 | திரு. யோக்கின் யோசெப் |
| 217.யா/உ/6958 | திரு. முத்தர் கந்தையா |
| 218.யா/உ/6960 | திரு. தம்பாப்பிள்ளை தம்பிராசா |
| 219.யா/உ/7003 | திரு. இனையதம்பி நன்னித்தம்பி |
| 220.யா/உ/7105 | திருமதி. செல்லம்மா வீரசிங்கம் |
| 221.யா/உ/7137 | திருமதி. பூமலர் நடராசா |
| 222.யா/உ/7185 | திரு. பென்சமின் அரசரத்தினம் மான் |

## வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவு

| | |
|---|---|
| 1.யா/வ.கி/70 | திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம் |
| 2.யா/வ.கி/122 | திரு. கந்தையா சிவஞானம் |
| 3.யா/வ.கி/175 | திரு. வேலுப்பிள்ளை ஐயம்பிள்ளை |
| 4.யா/வ.கி/193 | திரு. இராசையா ஜீவரட்ணம் |
| 5.யா/வ.கி/205 | திரு. சபாபதிப்பிள்ளை வீரகத்திப்பிள்ளை |
| 6.யா/வ.கி/222 | திரு. மரியாம்பிள்ளை றூபேட்மரியதாஸ் |
| 7.யா/வ.கி/292 | திரு. செபமாலை இராயப்பு |
| 8.யா/வ.கி/510 | திரு. முருகேசு கணபதிப்பிள்ளை |
| 9.யா/வ.கி/544 | திரு. நடராசா ஜெயராசா |
| 10.யா/வ.கி/556 | திரு. கபிரிகேல் ஆசீர்பாதம் |
| 11.யா/வ.கி/557 | திரு. தேவசகாயம் திரேஸ்புஸ்பம் |
| 12.யா/வ.கி/570 | திரு. சந்தியாப்பிள்ளை கஸ்மீர் |
| 13.யா/வ.கி/658 | திரு. சின்னத்தம்பி குலசிங்கம் |
| 14.யா/வ.கி/722 | திருமதி. மேரிமெக்டனிக் ஆனந்தராஜா |
| 15.யா/வ.கி/823 | திரு. முருகேசு சதாசிவம் வல்லிபுரநாதர் |
| 16.யா/வ.கி/864 | திரு. சின்னத்தம்பி வீரசிங்கம் |
| 17.யா/வ.கி/891 | திரு. மயில்வாகனம் திருநாமம் |
| 18.யா/வ.கி/939 | செல்வி. அன்னலட்சுமி கந்தசாமி |
| 19.யா/வ.கி/971 | திருமதி றோஸ்மேரிறெயினா எட்வேட்அரியநாயகம் |
| 20.யா/வ.கி/1005 | திரு. சின்னர் கணபதிப்பிள்ளை |
| 21.யா/வ.கி/1009 | திருமதி. ஜெயராணி சௌந்தரராசா |
| 22.யா/வ.கி/1022 | திரு. சபாபதிப்பிள்ளை முத்தையா |
| 23.யா/வ.கி/1075 | திரு. சிற்றம்பலம் பரமசிவம் |
| 24.யா/வ.கி/1084 | திரு. மயில்வாகனம் பசுபதி |
| 25.யா/வ.கி/1089 | திரு. பாக்கியநாதன் புவனேந்திரன் |
| 26.யா/வ.கி/1104 | திரு. கணபதிப்பிள்ளை வடிவேலு |
| 27.யா/வ.கி/1159 | திரு. சின்னையா கதிர்காமு |
| 28.யா/வ.கி/1217 | திருமதி. அந்தோனியாமரியரீட்டா ஜெயசீலன் |
| 29.யா/வ.கி/1243 | திரு. முருகேசு வினாசித்தம்பி |
| 30.யா/வ.கி/1421 | திரு. தம்பையா நாகமுத்து |

## வவுனியா மாவட்டம்

| | |
|---|---|
| 1.வ/வ/11 | திரு. சப்பாபதி வேலுப்பிள்ளை |
| 2.வ/வ/33 | திருமதி. வள்ளிப்பிள்ளை இராசையா |
| 3.வ/வ/45 | திரு. சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம் |
| 4.வ/வ/62 | திரு. செல்வச்சந்திரன் செல்வேஸ்வரன் |
| 5.வ/வ/71 | திரு. கார்த்திகேசு சிவராசா |
| 6.வ/வ/80 | திரு. சண்முகம் தனபாலசிங்கம் |
| 7.வ/வ/105 | திரு. கந்தையா நாகேஸ்வரன் |
| 8.வ/வ/112 | திரு. கனகசபை மகேந்திரன் |
| 9.வ/வ/113 | திரு. நடராசா சுந்தரமூர்த்தி |
| 10.வ/வ/173 | திரு. செல்லத்துரை செல்வசிறிதரன் |
| 11.வ/வ/184 | திரு. கந்தையா சதாசிவம் |
| 12.வ/வ/217 | திரு. வயிரமுத்து ஏரம்பு |
| 13.வ/வ/228 | திரு. கந்தையா சிவஞானசுந்தரம் |
| 14.வ/வ/240 | திரு. பாராஜசேகரசிங்கம் பூபாலசிங்கம் |
| 15.வ/வ/278 | திரு. அருளம்பலம் சிவசுப்பிரமணியம் |
| 16.வ/வ/288 | திரு. வீரவாகு வினாயகர் |
| 17.வ/வ/296 | திரு. கந்தர் சண்முகம் |
| 18.வ/வ/302 | திரு. பெருமையினார் லிங்கநாதன் |
| 19.வ/வ/307 | திரு. வைரமுத்து செல்வராசா |
| 20.வ/வ/308 | திரு. சங்கரப்பிள்ளை சிவபாதம் |
| 21.வ/வ/327 | திரு. காசிப்பிள்ளை சோமசுந்தரம் |
| 22.வ/வ/360 | திரு. முருகேசு பாலசிங்கம் |
| 23.வ/வ/366 | திரு. முத்தையா வேலுப்பிள்ளை |
| 24.வ/வ/384 | திரு. தம்பிராசா தவபாலன் |
| 25.வ/வ/385 | திரு. முத்தையா புஸ்பநாதன் |
| 26.வ/வ/431 | திரு. கனகசபை சிதம்பரப்பிள்ளை |
| 27.வ/வ்/438 | திரு. பரராசசிங்கம் சதாசிவம் |
| 28.வ/வ/450 | திரு. சின்னத்தம்பி இரத்தினம் |
| 29.வ/வ/461 | திரு. கணபதிப்பிள்ளை சின்னையா |
| 30.வ/வ/481 | திரு. வீரவாகு செல்வராசா |
| 31.வ/வ/488 | திரு. கணபதிப்பிள்ளை நடராசா |
| 32.வ/வ/497 | திரு. செல்வராசா யோகராசா |
| 33.வ/வ/499 | திரு. கந்தையா றொபீந்திரன் |
| 34.வ/வ/508 | திரு. சின்னத்தம்பி கார்த்திகேசு |
| 35.வ/வ/511 | திரு. கிருஸ்ணபிள்ளை சண்முகராசா |
| 36.வ/வ/544 | திரு. அரசர் வேலுப்பிள்ளை |
| 37.வ/வ/579 | திரு. கதிரேசு வீரசிங்கம் |
| 38.வ/வ/627 | திரு. முத்துக்குமாரு கந்தவனம் |
| 39.வ/வ/658 | திரு. பேரம்பலம் இராசரத்தினம் |
| 40.வ/வ/662 | திரு. கைலாயபிள்ளை அமிர்தலிங்கம் |
| 41.வ/வ/708 | திரு. கந்தையா நவரத்தினம் |

## வேலணை உதவி அரச அதிபர் பிரிவு

| | |
|---|---|
| 1.யா/வே/156 | திரு. அம்பலவாணர் தர்மகுலசிங்கம் |
| 2.யா/வே/178 | திருமதி. விஜயலட்சுமி பாலச்சந்திரன் |
| 3.யா/வே/214 | திரு. மடுத்தீன் சிங்கராசா |
| 4.யா/வே/253 | திரு. மயில்வாகனம் தம்பையா |
| 5.யா/வே/305 | திருமதி. பத்மலோஜினி தவபாலன் |
| 6.யா/வே/424 | திரு. வேலாயுதர் ஆறுமுகம் |
| 7.யா/வே/470 | திரு. நாகலிங்கம் சரவணமுத்து |
| 8.யா/வே/505 | திரு. சுப்பையா சதாசிவம் |
| 9.யா/வே/541 | திருமதி. அன்னமுத்து சொர்ணலிங்கம் |
| 10.யா/வே/543 | திரு. மருதப்பு சின்னத்தம்பி |
| 11.யா/வே/607 | திருமதி. அருளம்மா இராமலிங்கம் |
| 12.யா/வே/629 | திரு. அருளம்பலம் கனகரெத்தினம் |
| 13.யா/வே/642 | திருமதி. தங்கம்மா சின்னத்துரை |
| 14.யா/வே/689 | திருமதி. சின்னப்பிள்ளை முருகேசு |
| 15.யா/வே/703 | திருமதி. இராசம்மா தம்பியையா |
| 16.யா/வே/707 | செல்வி. ஜெகதாம்பாள் பொன்னையா |
| 17.யா/வே/773 | திருமதி. மங்கையற்கரசி நமசிவாயம் |
| 18.யா/வே/851 | திரு. நாகரத்தினஐயர் ஸ்ரீநிவாசக்குருக்கள் |
| 19.யா/வே/853 | திரு. கந்தையா சோமசுந்தரம் |
| 20.யா/வே/972 | திரு. ஆறுமுகம் யாதவராயர் |
| 21.யா/வே/981 | திரு. பொன்னுச்சாமி சிவலிங்கம் |
| 22.யா/வே/1025 | திருமதி. பராசக்தி செல்லத்துரை |
| 23.யா/வே/1067 | திருமதி. அன்னலட்சுமி நடராசா |
| 24.யா/வே/1076 | திரு. கனகசபை சோதிலிங்கம் |
| 25.யா/வே/1145 | திரு. தம்பையா சண்முகம்பிள்ளை |
| 26.யா/வே/1149 | திருமதி. பூமணி சிவநாதன் |
| 27.யா/வே/1215 | திருமதி. சின்னத்தங்கம் கந்தையா |
| 28.யா/வே/1223 | திரு. சங்கரப்பிள்ளை சாந்தலிங்கம் |
| 29.யா/வே/1265 | திருமதி. செல்லாச்சி துரையப்பா |
| 30.யா/வே/1313 | செல்வி. சந்திரமதி சிவசம்பு |
| 31.யா/வே/1341 | திரு. இராமலிங்கம் பொன்னுத்துரை |
| 32.யா/வே/1344 | செல்வி. ஓங்காரரூபி சண்முகநாதன் |
| 33.யா/வே/1365 | திருமதி. அருளம்மா சிங்கராஜர் |
| 34.யா/வே/1391 | திரு. கைலாசபிள்ளை கணேசமூர்த்தி |
| 35.யா/வே/1409 | திரு. வைத்திலிங்கம் வேலாயுதபிள்ளை |
| 36.யா/வே/1423 | திரு. குமாரசாமி போசராசா |
| 37.யா/வே/1435 | திருமதி. வினிவிறீடா அன்ரனிதாசன் |
| 38.யா/வே/1477 | திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம் |
| 39.யா/வே/1498 | திரு. கந்தையா மாசிலாமணி |
| 40.யா/வே/1505 | திரு. ஆறுமுகம் செல்லத்துரை |
| 41.யா/வே/1536 | திருமதி. அன்னம்மா இராசதுரைஅந்தோனிப்பிள்ளை |
| 42.யா/வே/1547 | செல்வி. விசாலாட்சி தில்லையம்பலம் |
| 43.யா/வே/1605 | திருமதி. சறோஜினிதேவி விமலானந்தம் |
| 44.யா/வே/1612 | திருமதி. கனகம்மா காசிப்பிள்ளை |
| 45.யா/வே/1633 | திருமதி. பத்தினிப்பிள்ளை அருணாசலம் |
| 46.யா/வே/1697 | திரு. ஆறுமுகம் பரநிருபசிங்கம் |
| 47.யா/வே/1744 | திரு. கணபதிப்பிள்ளை நாகலிங்கம் |
| 48.யா/வே/1769 | திரு. அம்பலவாணர் குழந்தைவேலு |
| 49.யா/வே/1848 | திருமதி. இலட்சுமி இராசையா |
| 50.யா/வே/1880 | திரு. நாகமுத்து ஜயாத்துரை |
| 51.யா/வே/1927 | திரு. செல்லத்துரை கணநாதன் |
| 52.யா/வே/1948 | திரு. பசுபதி நல்லதம்பி |
| 53.யா/வே/1973 | திரு. சுப்பையா சுந்தரம் |
| 54.யா/வே/2037 | திரு. சவரிமுத்து அத்தனாஸ் |
| 55.யா/வே/2108 | திரு. மனுவேற்பிள்ளை கிறிஸ்சோஸ்ற்றம்பொன்ராசா |
| 56.யா/வே/2146 | திரு. தியாகராசா விஜயகுமார் |
| 57.யா/வே/2181 | திரு. வீரகத்தி வேலுப்பிள்ளை |
| 58.யா/வே/2214 | திரு. தாமோதரம்பிள்ளை தம்பாப்பிள்ளை |
| 59.யா/வே/2233 | திரு. புத்திரங்கொண்டார் சுப்பிரமணியம் |
| 60.யா/வே/2317 | திருமதி. மாரிமுத்து பொன்னம்பலம் |
| 61.யா/வே/2323 | திருமதி. சசிமாலா சிறிக்குமார் |
| 62.யா/வே/2324 | திரு. நாகமுத்து நமசிவாயம் |
| 63.யா/வே/2365 | திரு. கார்த்திகேசு முத்துலிங்கம் |
| 64.யா/வே/2440 | திரு. பொன்னம்பலம் செல்வரட்ணம் |
| 65.யா/வே/2492 | திரு. நாகராசா கோபாலகிருஷ்ணன் |
| 66.யா/வே/2548 | திரு. ஆறுமுகம் பசுபதி |
| 67.யா/வே/2565 | திருமதி. வாமகேசி மனோகரன் |
| 68.யா/வே/2566 | திருமதி. பெரியநாயகி செல்லத்துரை |
| 69.யா/வே/2634 | திரு. சரவணமுத்து கார்த்திகேசு |
| 70.யா/வே/2646 | திரு. வைத்திலிங்கம் கந்தையா |
| 71.யா/வே/2709 | திரு. திருநாவுக்கரசு மகாலிங்கம் |
| 72.யா/வே/2814 | திருமதி. சவரி ஞானப்பு |
| 73.யா/வே/2830 | திருமதி. நல்லம்மா தில்லைநாதன் |
| 74.யா/வே/2843 | திரு. சரவணமுத்து பரநிருபசிங்கம் |
| 75.யா/வே/2852 | திரு. தம்பிப்பிள்ளை தர்மலிங்கம் |
| 76.யா/வே/2916 | திருமதி. சபீனா மரியாம்பிள்ளை |
| 77.யா/வே/2924 | திரு. சுப்பிரமணியம் நல்லையா |
| 78.யா/வே/2927 | திருமதி. அமலசிரோன்மணி அருள்நேசன் |
| 79.யா/வே/3021 | திரு. இளையதம்பி தம்பையா |
| 80.யா/வே/3050 | திரு. நாகநாதம்பிள்ளை சிவஞானம் |
| 81.யா/வே/3084 | திரு. கந்தையா ஆறுமுகம் |
| 82.யா/வே/3129 | திருமதி. நல்லதங்கம் கனகசபை |
| 83.யா/வே/3215 | திருமதி. அமிர்தகௌரி தெய்வேந்திரன் |
| 84.யா/வே/3219 | திரு. அப்பாக்குட்டி சொக்கலிங்கம் |
| 85.யா/வே/3252 | திருமதி. மகேஸ்வரி ஆறுமுகம் |
| 86.யா/வே/3257 | திருமதி. மேரி மரியாம்பிள்ளை |
| 87.யா/வே/3276 | திருமதி. அன்னம்மா லாசரஸ்பிள்ளை |
| 88.யா/வே/3293 | திருமதி. லேனம்மா சந்தியாப்பிள்ளை |
| 89.யா/வே/3303 | திருமதி. கருணாவதி மாணிக்கம் |
| 90.யா/வே/3328 | திருமதி. சோதிமலர் கருணலிங்கம் |
| 91.யா/வே/3425 | திருமதி. எட்வீசம்மா லோறன்ஸ் |
| 92.யா/வே/3483 | திரு. தம்பிப்பிள்ளை மரியாம்பிள்ளை |
| 93.யா/வே/3509 | திருமதி. இராசம்மா சோமசுந்தரம் |
| 94.யா/வே/3511 | திருமதி. தெய்வானைப்பிள்ளை நாகலிங்கம் |
| 95.யா/வே/3583 | திரு. நாகரத்தினம் புண்ணியமூர்த்தி |
| 96.யா/வே/3607 | திரு. பிலிப்இம்மானுவேல் குணநாயகம் |
| 97.யா/வே/3643 | திருமதி. அன்னப்பிள்ளை பசுபதிப்பிள்ளை |
| 98.யா/வே/3648 | செல்வி. அருட்செல்வி சிவகடாச்சம்பிள்ளை |
| 99.யா/வே/3659 | திரு. சுப்பையா துரைச்சாமி |
| 100.யா/வே/3668 | திருமதி. அமராவதி ஆறுமுகம் |
| 101.யா/வே/3703 | திரு. மருசலீன் ஞானப்பிரகாசம் |
| 102.யா/வே/3723 | திருமதி. இராசம்மா கனகரத்தினம் |
| 103.யா/வே/3738 | திரு. அம்பலவாணர் பொன்னுத்துரை |
| 104.யா/வே/3760 | திருமதி. ஞானசக்தி பாலசுப்பிரமணியம |

(முற்றும்)

க.பொ.த. (சா.த)
மாணவர்களே! வலம்புரியில்
தொடர்ந்து பயிற்சி
வினாத்தாள்கள்
வெளிவருகின்றன.

விவாத அரங்கு -5

விடயம்
வீடியோப் படப்பிடிப்பு தமிழர்
கலாசாரத்தைப் பாதிக்கின்றது.
பாதுகாக்கின்றது.

நடுவர் : புத்தூர் சி.சிவநேசன்
(பிரபல சட்டத்தரணி)

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி

அனுப்பவேண்டிய முகவரி
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# தீவிரவாதிகளின் மறைவிடங்கள் மீது பாகிஸ்தான் விமானங்கள் தாக்குதல்

## அல்-கெய்டா போராளிகள் 70பேர் பலி

(இஸ்லாமபாத்)

அல்கெய்டாத் தீவிரவாதிகளின் மறைவிடங்கள் மீது பாகிஸ்தான் போர் விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் குண்டுவீசித தாக்குதல் நடத்தியதில் 70பேர் கொல்லப்பட்டுள்ளனர். பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டிய கிராமங்களில் பழங்குடியின மக்கள் வசிக்கின்றனர். இவர்களின் ஆதரவோடு அப்பகுதிகளில் அல் கெய்டாத் தீவிரவாதிகள் பதுங்கியுள்ளனர். இந்தத் தீவிரவாதிகளை ஒழித்துக் கட்ட பாகிஸ்தான் இராணுவம் அவ்வப்போது தாக்குதல் நடத்துவது வழக்கம்.

இந்த நிலையில் பாகிஸ்தானில் தெற்கு வசிரிஷ்தான் பகுதியில் உள்ள குன்கெலா மலைகளில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக பாகிஸ்தான் இராணுவத்திற்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து, தீவிரவாதிகளின மறைவிடங்கள் மீது நேற்றுமுன்தினம பாகிஸ்தான போர் விமானங்களும் இராணுவ ஹெலிகொப்டர்களும் குண்டுகள் வீசி தாக்குதல நடத்தின. ஏவுகணைத் தாக்குதலும நடைபெற்றது. இதில் 70பேர் கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் இறந்தவர்களின் எண்ணிக்கை பற்றி அரசு தரப்பில் அதிகாரப்பூர்வத் தகவல்கள் ஏதும் வெளியிடப்படவில்லை. கடந்த இருதினங்களுக்கு முன் தெற்கு வசிரிஷ்தானின் தலைநகரான வானாவில் பாகிஸ்தான் இராணுவ வாகனங்கள் தீவிரவாதிகள் வைத்த கண்ணிவெடியில் சிக்கின.

இந்தக் கண்ணிவெடித்தாக்குதலில் இராணுவ வீரர்கள் 3பேர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவத்திற்குப் பதிலடியாக கடந்த வியாழனன்று தீவிரவாதிகளுக் கெதிரான அதிரடித்தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படுகின்றது. (ப)

## அமெரிக்க இராணுவ வீரருக்குத் தண்டனை

அல்-கெய்டா பயங்கரவாத அமைப்பினருக்கு அமெரிக்காவின் இராணுவ இரகசியங்களை வெளியிட்ட அமெரிக்க இராணுவ வீரர் ஆண்டர்சனுக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கில் அமெரிக்க இராணுவ டாங்கிகளை இயக்கும் பணியில் இவர் ஈடுபட்டு வந்தார். அமெரிக்க இராணுவ நடமாட்டம் பற்றிய தகவல்களை அல்-கெய்டா அமைப்பினருக்கு இவர் அளித்துவந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

இதையடுத்து, இவர் கைது செய்யப்பட்டு, அமெரிக்க இராணுவ நீதிமன்றத்தின் விசாரணைக்கு ஆஜர்படுத்தப்பட்டார்.

இந்த விசாரணையின் தீர்ப்பு வெளியிடப்பட்டது. அவர் மீது தேசத் துரோகக் குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டனை உறுதி செய்யப்பட்டது. அவர் மீதான குற்றச்சாட்டு உறுதியாகிட்டதால், அதிகபட்சத் தண்டனை விதிக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# ஈராக்கின் முக்கிய நகரங்கள் மீது அமெரிக்க விமானங்கள் தாக்குதல்

## குழந்தைகள் உட்பட 29பேர் பலி; 60பேர் காயம்

(பலுயா)

ஈராக்கில் பலுயா நகரில் அமெரிக்க விமானங்கள் குண்டுவீசித் தாக்குதல்கள் நடத்தியதில் 12பேர் பலியாகியுள்ளதுடன், 9பேர் காயமடைந்தனர்.

ஈராக்கின் மற்றொரு நகரமான தால் ஆஃபரில் அமெரிக்க விமானங்கள் குண்டுவீசித தாககியதில் 17பேர் பலியகியதுடன், 51பேர் காயமடைந்தனர்.இத்தாக்குதல்களில் இறந்தவர்களில் போரும்பாலானோர் பெண்கள் மற்றும குழந்தைகள் என நகரின் அரசு மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவர் கூறினார். குண்டுவீச்சினால் சேதமடைந்த கட்டடங்களின் இடுபாடுகளில் இருந்து குழந்தைகளின் சடலங்களை மீட்கும் முயற்சிகள் தொடர் ந்து இடம் பெற்றுவருகின்றன.

அண்மையில் பலுயா நகரில் அமெரிக்கப் படையினர் 7பேர் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர். இதற்குப் பதிலடியாகவே அப் பகுதியில அமெரிக்க விமானங்கள் குண்டு வீசித்தாக்கி வருகின்றன. (ப)




# அல் –கெய்டா தாக்கலாம்! உஷாரடைகிறது பாக். அரசு

(இஸ்லாமபாத்)

தான்சானியா பயங்கரவாதி வெளியிட்ட தகவலைத் தொடர்ந்து, அல்-கெய்டாவுக்கு எதிரான நடவடிக்கையினை எடுக்க பாகிஸ்தான் உத்தரவிட்டுள்ளது.

குஜராத்தில் கடந்த வாரம் கைது செய்யப்பட்ட அகமதுகல்பான்கிளானி வெளியிட்ட தகவலின் அடிப்படையில் பாகிஸ்தானில் அல்-கெய்டா தாக்குதல் நடத்தவிருப்பதாக தெரியவந்துள்ளது. இதையடுத்து பாகிஸ்தான் அரசு, அந்த அமைப்புக்கு கெதிரான நடவடிக்கையை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

பாகிஸ்தான் முழுவதும் அல்-கெய்டா அமைப்பிற்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கும் முடிவு அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. பாகிஸ்தானின் பல்வேறு பகுதிகளில் அல்-கெய்டாவினர் அடைக்கலம் புகுந்துள்ளனர் எனக் கிடைத்த தகவலையடுத்து, அமைச்சரவை கூடி இந்த முடிவை எடுத்ததாக அந்த நாட்டு உள்துறை அமைசசர் பைசால்சலேஹயாட் கூறினார். (ப)

# ரீ.விகளூடாக செக்ஸ்!

(நியூயோர்க்)

செக்ஸ் சம்பந்தமான டிவி நிகழ்சசி களைப் பார்க்கும் 12 தொடக்கம் 17 வரையான வயதுடையவர்களிடம அவை பெரும் பாதிப்புக்களை ஏற்படுததுகின்றன என அய்வுகள் மூலம் தெரியவந்தள்ளது.

அமெரிக்காவில் ஆயிரத்து 792 பேரிடம் ஓராண்டாக நடத்தப்பட்ட ஆய்வில் இது உறுதிப்படத்தப்படடுள்ளது.

அந்த வயையில் இளசுகள் சராசரியாக 3 மணிநேரம் ரீ.வி.பார்க்கின்றனர். இந்த நிகழ்ச்சிகள் அதிகம் செக்ஸ் தொடர்பானவையாக இருப்பதால் அவர்களின் மன உணர்வுகளில் பாரிய தாக்கங்கள் நிகழ் கின்றன.

இதனால் ரீ.வி பார்க்காமல் இருப்பவர்களை விட,ரீ.வி பார்ப்பவர்களுக்கு செக்ஸ் உணர்வுகள் அதிகப்படியாகத் தூண்டப்படு கினறன.

இதையடுத்து பல்வேறு செக்ஸ் சம்பந்தமான செயல்களில் அவர்கள் ஈடுபடுகின்றனராம். என இந்த ஆய்வுகளில் மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் ரீ.வி யில் பார்ப்பதைப் போன்றே, அவர்களது அன்றாட நடத்தைக் கோலங்களும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. எனவே இளசுகளிடையே செக்ஸ் உணர்வு களை கிளறி விடுவதில் ரீ.வி கள் பெரும்பங்காறறுவதாகச சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப)

# கொங்கோவில் "கருடா" படை

ஆபிரிக்க நாடான கொங்கோவில் அமைதிப் பணியில் இந்திய விமானப்படை வீரர்கள் ஈடுபடுகின்றனர்.

தேர்ந்தேடுக்கப்பட்ட கொமாண்டோக்கள் அடங்கிய இப்பிரிவுக்கு "கருடாபடை" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்த வீரர்களுக்கு திடீர் அதிரடித் தாக்குதல்களைச் சமாளிக்கக்கூடிய மிகக் கடுமையான பயிற்சியளிக்கப்பட்டு, கொங்கோவில் பணியாறறுவதற்காக அனுப்பப்பட்டுள்ளனர். அங்கு அமைதியை நிலைநாட்டுவதில் ஏற்கனவே முககிய பங்காற்றி வரும் கொங்கோப்படையினருக்குத் துணையாக "கருடா" பிரிவினரும் அமைதிப் பணியில் ஈடுபடுவார்கள்.

இதேவேளை, கொங்கோவில் அமைதிப் பணிகளில் ஈடுபடுவதற்காக 120 இந்தியத் துருப்புக்கள் ஏற்கனவே அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ப)

## 13வய்து சிறுமி மீது பாலியல் வல்லுறவு

# பங்களாதேஷ் பொலிஸார் ஐந்து பேருக்கு மரணதண்டனை

(டாக்கா)

பங்களாதேஷில் 13 வயதுச் சிறுமி ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உள்படுத்திக் கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் பொலிஸ் அதிகாரிகள இருவருக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

1994ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் டாக்காவி லிருந்து தினாஜ்பூக்கு ரயிலில் தனியாக சென்றுகொண்டிருந்த சிறுமி ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திக் கொலை செய்த குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்களுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இச்சம்வபத்துடன் தொடர் புடைய மேலும் 3பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டாலும் அவர்களது கருணை மனுக்கள் தொடர்பாக பங்க ளாதேஷ் அதிபர் இயாஜுதீன் அகமது பரிசீலனை செய்துவருவதால் இவர்கள் இன்னும் தூக்கிலிடப்படவில்லை.

இதேவேளை மேற்படி பாலியல் வல்லுறவுச் சம்பவம் குறித்து பங்களாதேஷ் அதிபர் அதிகபட்ச கவனம் செலுத்த வேண்டும் என கோரி மக்கள செய்த ஆர்ப்பாட்டங்களை தடுப்பதற்கு பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக் கைகளால் 7பேர் உயிரிழந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ப)

## ஆஃபர் நகரைக் கைப்பற்றுவதற்காக

# அல்–கெய்டா தீவிரவாதிகள் மீது அமெரிக்கப் படைகள் தாக்குதல்

அல்-கெய்டாத் தீவிரவாதிகள் மறைந்திருநத கட்டடங்கள் மீது அமெரிக்க இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஈராக்கில் உள்ள தால் ஆஃபர் நகருக்கு அருகே தீவிரவாதிகளுக்கும் அமெரிக்க இராணுவத்தினருக்கும் கடும் மோதல் நடைபெற்று வருகின்றது. தெருவெங்கும் பிணங்கள் சிதறிக் கிடக்கும் நிலையில், தொடர்ந்தும் குண்டுகள் வீசுத தாக்குதல்கள் இடம்பெற்று வருவதால் அவற்றை அகற்ற முடியவில்லை.

இப் பகுதியிலிருந்து ஈராக்கிய அரசின் படைகளை தீவிரவாதிகள் விரட்டி, அங்கு தமது படைகளைப் பலப்படுத்தி வைத்துள்ள நிலையில், மீண்டும் ஈராக்கிய அரசின் கட்டுப்பாட்டில் இந்நகரைக் கொண்டுவர அமெரிக்கப் படைகள் நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளன என்று அமெரிக்க இராணுவ அதிகாரிகள் கூறினர்.

இத் தாக்குதலால் ஆஃபர் நகரமெங்கும் குண்டுவெடிப்புச் சத்தங்களும், வெடியோசைகளும் கேட்டுவருவதாகவும் அப் பகுதியெங்கும் புகைமண்டலாமாகக் காட்சியளிப்பதாகவும் ஈராக்கியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத் தாக்குதல்களில் சுமார் 150ற்கும் மேற்பட்ட அல்-கெய்டாத் தீவிரவாதிகள் கொல்லப்பட்டிருக்கலாமெனவும், தொடர்ந்து அமெரிக்கப் படைகள் போர் விமானங்கள். டாங்கிகள் என்பவற்றின் உதவியுடன் தாக்குதல்களை நடத்திவருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ப)




இந்தோனேஷிய தலைநகர் ஜகார்த்தாவில் உள்ள அவுஸ்திரேலிய தூதரகத்திற்கு அருகில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 6பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கும் அதிகமானோர் ப[illegible]ாயமடைந்தனர். இக்குண்டுவெடிப்பினால் சேதமடைந்துள்ள அவுஸ்திரேலிய தூதரகத்தையும், தீயணைப்புப் படையினர் மீட்புப் பணியில் ஈடுபட்டிருப்பதையும் படங்களில் [illegible]னலாம். (ப)

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூ உம் இல் - குறள்

வலம்புரி

# புத்த பிக்குகளின் ஆர்ப்பாட்டம் ரணில் - சந்திரிகா சந்திப்பு

இலங்கையின் சமாதான முயீற்சியில் அனுசரணையாளராகச் செயற்படும் நோர்வேக்கு எதிராகக் கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகத்தின் முன்பாக பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர்.

சமாதான முயற்சிக்கு நோர்வே அரசு பங்காற்றி வருவதால், அதனை விரும்பாத பௌத்த பிக்குகளே நோர்வேக்கு எதிராக ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தியுள்ளனர்.

நோர்வேக்கு எதிராக பௌத்த பிக்குகள் நடத்திய ஆர்ப்பாட்டம், சமாதான முயற்சிகளில் பௌத்த பிக்குகள் கொண்டுள்ள நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி உள்ளது. அழகிய இலங்கைத் தீவில் பல்லின மக்களும் ஒற்றுமையாக வாழ முடியாமைக்குக் காரணமாக இருந்தவர்கள், இருப்பவர்கள் பௌத்த பிக்குகள் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமிருக்க முடியாது.

காலத்திற்குக் காலம் தமிழ் மக்களுக்கு எதிரான பிரசாரங்களை பௌத்த பிக்குகள் மேற்கொண்டதன் காரணமாக சிங்கள மக்கள் தமிழர்கள் மீது விரோதம் கொள்ள ஆரம்பித்தனர்.

தமிழ் மக்கள் மீது நியாயமற்ற விரோதத்தை சிங்கள மக்கள் தமக்குள் வளர்த்துக் கொள்வதற்கு பிக்குகளின் பிரசாரமே காரணமாகும். இவ்வாறு தமிழ் மக்களுக்கு எதிராக பிரசாரம் செய்வதற்கும், அவர்களுக்கு எதிரான வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதற்கும், பௌத்த பிக்குகள் சிங்கள மக்களிடமும் சிங்கள ஆட்சியாளர்களிடமும் கொண்டுள்ள ஆதிக்கமே காரணம் என்பதையும் ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

அதாவது சிங்கள ஆட்சியாளர்கள் பௌத்த பிக்குகளின் கட்டளைகளுக்கு அமையவே ஆட்சி நடத்துகின்றனர். சிங்கள ஆட்சியாளர்கள் எவரும் பௌத்த பிக்குகளைக் கட்டுப்படுத்தும் திராணியற்றவர்களாக இருக்கின்றனர். இதன் காரணமாக பௌத்த பிக்குகளின் இனவாதத்தை கட்டுப்படுத்தவோ அல்லது சமாதான முயற்சிகளுக்கு எதிராக அவர்கள் மேற்கொள்ளும் எதிர்ப்பு நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தவோ சிங்கள அரசுகள் முன்வரப் போவதில்லை.

ஆக, இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வை தடுத்து அதற்கெதிராக ஆர்ப்பாட்டம் செய்யும் அதிகாரத்தில் பௌத்த பிக்குகள் கொண்டிருக்கும் வரை இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது சாத்தியமற்றதாகவே இருக்கும்.

இது ஒருபுறம் - மறுபுறத்தில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்போவதாக அறிவித்திருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அடுத்துவரும் 3 மாதத்திற்குள் அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியைக் கைப்பற்றுவோம் எனக் கூறிய எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் சந்திப்பு நடத்தியுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரச சமாதான முயற்சிக்கு ஆதரவு வழங்கப் போவதில்லை என அறிவித்த ரணில் விக்கிரமசிங்கவும், ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சு நடத்துவதை விட ஜே.வி.யுடன் பேச்சு நடத்திப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என அறிவித்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் திடீரென சந்தித்து நாட்டில் சமாதான முயற்சி குறித்து பேசியுள்ளனர் எனில், எப்படி இருக்கிறது அரசியல் ஜாலம்.

நாட்டு மக்கள் வெறும் வாக்குப் போடும் இயந்திரங்கள். அவர்களுக்கு எதுவுமே தெரியாது என்ற நிலைப்பாட்டில் அரசும், எதிர்க்கட்சியும் நாடகம் போடுகின்றன. சில சந்தர்ப்பங்களில் தனித்தனியே நாடகம் போடும் அரசும், எதிர்க் கட்சியும் சிலவேளைகளில் இணைந்து ஒரே மேடையில் நடிப்பதைப் பார்க்கும்போது ஒரு புறத்தில் வேடிக்கையாகவும், மறுபுறத்தில் வேதனையாகவும் இருக்கின்றது.

எதுவாயினும் புத்தபிக்குகளின் ஆர்ப்பாட்டம் ஜனாதிபதி - எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் சந்திப்பு இவை எல்லாம் உலகையும், மக்களையும் ஏமாற்றும் வெறும் வித்தையாகும்.

# இந்துக்கள் வேற்று சமயத்திற்கு மாறுவதற்கும் மாற்றப்படுவதற்கும் சந்தர்ப்பமளிப்பது இந்துசமயமே

## கலாநிதி க.குணராசா சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வறுமையையும் போர்நிலை களையும் பயன்படுத்தி இந்துசம யத்தில் இருந்து இந்துசமயத்தவர் களை வேற்றுசமயத்திற்கு மதம் மாறறிக்கொள்கிறார்கள் என சைவ சமய விவகாரக்குழுவின் தலை வரும் மாநகரசபை ஆணையாளரு மான கலாநிதி க.குணராசா தெரி வித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இடம்பெற்ற 12ஆவது நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு விழாவில கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தெடர்ந்தும் பேசு கையில்,

மக்கள் வறுமைப்பட்டு இருக் கின்ற வேளையிலே இந்துசமய நிறுவனங்களும் இந்துசமய அமைப் புக்களும் அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் இவ்வாறு இந்து சமய அமைப்புக்கள் உதவி செய் வதன் மூலமாகத்தான் மக்களுக்கு சமயத்தின் மீது நம்பிக்கை ஏற் படும் அவர்களுக்கு மதம் மாறு கின்ற நோக்கமும் அற்றுப்போகும்.

இன்றைய காலகட்டத்தில் சைவ சமயத்தை பொறுத்தவரையில் ஆலயங்களை இடித்து பெரி தாக்கிக் கட்டுவதும் கோபுரங்களைக் கட்டுவதும் பெருந்தொகையான பணத்தினை செலவு செயது நிகழ்ச்சிகள் வாணவேடிக்கைகளை நடத்துவதுமாகவே இருக்கின்றன. இத்தகைய நிலைகளையே வெளி நாட்டில் இருக்கின்ற இந்துசமய மக்களும் விரும்புகின்றனர். இதனால், வறுமைப்பட்டிருக்கின்ற மக்கள் இந்துசமயத்தில் இருந்து வேறு சமயங்களுக்கு மாறுகின்றனர். இந்துக்கள் வேறு சமயத்திற்கு மாறுவதற்கும் மாற்றப்படுவதற்கும் இந்துசமயமே சந்தர்ப்பத்தை ஏற் படுத்திக்கொடுக்கின்றது.

இந்துசமயத்தினர் பெருந்தொகை யான பணத்தினை ஆலயங்களைப் புனரமைப்பதற்கும வாணவேடிக் கைகள் நிகழ்த்துவதற்கும் பயன் படுத்தாமல் அதில் ஒரு குறிப்பிட்ட தொகையையேனும் வறுமைப்பட்ட மக்களது தேவைகளுக்காக பயன படுத்துவோமானால் இந்துசமயத்தை வளர்த்தெடுக்க முடியும். இதற்கு உதாரணமாக தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில் சிறுவர் இல்லத்தை எடுத்துக் கொள்ள லாம்.

ஐரோப்பா, பிரித்தானியா போன்ற நாடுகளில் யுத்தம் நிகழ்ந்போது அவ் யுத்தத்தால் 40சதவீத மக்கள் மனநோயாளிகளாகப் பாதிக் கப்பட்டனர் ஆனால், யாழ்.குடா நாட்டில் இருந்து 4இலட்சம் மக்கள் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்துள்ள போதும், 17சதவீத மானோரே மனநோயால் பாதிக் கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வெளிநாடுகளைவிட யாழ்.குடாநாடடு மக்கள் கூடுதலான யுத்தங்களைச் சந்தித்த போதும் மிகக குறைந்தளவானோரே மனநோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் எனின் அதற்குக் காரணம மக்களது இறைநம்பிக்கையே எனவும் சுட்டிக்காட்டினார்.

(ரு-19)

# சிறுவர் தினத்தை முன்னிட்டு நடாத்தப்படும்

## சித்திரப் போட்டியில் தெரிவாகும் மாணவர்கள் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்து நலன்புரி நிலைய ங்களில் வாழும் சிறுவர்கள் மத்தியில் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு இரு பிரிவுகளாக நடாத்தப்பட்ட சித்திரப்போட்டியில் தெரி வாகியுள்ள 100 மாணவர்களது பெயர்களை யாழ்மாவட்ட மனித உரிமைகள் ஆணைககுழு அலுவலகத்தினர் வெளியிட்டுள்ளனர்.

அதாவது 10 முதல் 14 வயதிற் குட்பட்ட பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 50 மாணவர்களுக்கு 14 முதல் 18 வயதிற்குட்பட்ட பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட 50 மாணவாகளுக்கும் பெறுபேறுகள் அவர்களது விலாசத்திற்கு எதிர்வரும் 15ஆம் திகதி அனுப்பி வைக்கப்படவுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட 100 மாண வர்களுக்குமான இறுதிப் போட்டி எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கான உபகரணங்கள் அனைத்தும் அன் றையதினம் அவர்களுக்கு இலவ சமாக வழங்கப்படும்.

இறுதிப் போட்டியில் பங்கு பற்றும் 100 மாணவர்களுக்கும் தலா ஒரு ரீசேட் பரிசாக வழங்கப் படவுள்ளது. இவ் இறுதிப் போட் டியில் தெரிவாகும் 10 மாணவர்களும் அவர்களது பெற்றோரும் எதிர்வரும் முதலாம் திகதி சிறுவர் உரிமைகள் தினத்தை முன்னிட்டு கொழும்பு ஜெயவர்த்தனபுர மண்ட பத்தில் நடைபெறவுள்ள சித்திரப் போட்டியில் பங்குபற்றுவதற்காக யாழ். மாவட்ட மனித உரிமைகள் ஆணைக் குழுவால் எதிர்வரும் 29ம் திகதி கொழும்பிற்கு அழைததுச் செல்லப் படுவர்.

அத்துடன் இவர்களை தெஹி வளை மிருகக் காட்சிச் சாலை, கொழும்பு அரும்பொருட் காட்சிச் சாலை என்பவற்றையும் பார்வையிட அழைத்துச் செல்லப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ரு-19)

# முகமாலை சோதனைச் சாவடியில் இளைஞர்கள் இருவர் கைது

(முகமாலை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டிலுள்ள வன்னிப்பகுதியில் இருந்து, முகமாலைச் சோதனைச் சாவடியின் ஊடாக யாழ். குடாநாட் டுக்குள் நுழையவிருநத 2 இளைஞர்களை முகமாலையில் வைத்துப் படையினர் கைதுசெய்துள்ளனர்.

இவர்கள் இருவரும் முல்லைத் தீவைச் சேர்ந்தவர்களாவர் ஒன்றிற்கு மேற்பட்ட அடையாள அட்டைகள் இருந்ததென்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டு கடந்த வ்யாழக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இந்நிலையில் இவர்களைப் பிணையில் எடுக்க எவரும் முன் வராததால் இவ்விருவரும் யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். (யே)

# வட-கிழக்கில் மீளக்குடியமர்த்த ஐரோப்பிய ஒன்றியம் நிதியுதவி

(கொழும்பு)

யுத்தத்தினால் வடக்குக் கிழககில இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீண்டும் அவர்களின் சொந்த இட ங்களில் குடியமர்த்துவதற்கு 496 மில்லியன் ரூபா நிதியை ஐரோப் பிய ஒன்றியம் வழங்கியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங் கைக்கான வதிவிடப் பிரதிநிதி கிரிஸ்ரினா ஸ்ரொபோள் நிதியமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைகக ளப பணிப்பாளர் நாயகம் சுஜாத்தா கூரே ஆகியோர் இதற்கான உடன் படிக்கையில் கடந் த வியாழக் கிழமை கைச்சாத்திட்டனர்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றின் ஒத்துழைப் போடு வடக்குக் கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிககப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யுத்த அனர்த்தங்களின் போது இடம்பெயர்ந்த சுமார் ஆயிரம் குடும்பங்கள் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியுள்ள நிதி உதவியோடு மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.

2002 ஆம் ஆண்டு ஒஸ்லோவில நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் வழங்கப்பட்ட உறுதி மொழிக்கு அமையவே இந்த நிதியுதவியை ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்கியிருப்பதாக அதன் இலங் கைக்கான பிரதிநிதி பௌட்டர் வில்டன் தெரிவித்தார்.

(யே)

# நல்லூர் ஆலய சூழலில் இன்று

(நல்லூர்)

நலலூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தையொட்டி நடைபெற்று வரும் சமய நிகழ்வுகளில்,

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸதான ஆதரவில் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடாத்திவரும் தெய்வீக இசையரங்கில் இன்று மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை சிவஞான சேகரத்தின் இசைக்கச்சேரி இடம்பெறவுள்ளது. பக்க வாத்தியங்களாக சைந்தவி இராதாகிருஷ்ணன் வயலினும், எஸ்.துரைராசா மிருதங்கமும், கே. அனந்தகோபன் கெஞ்சிராவும், எம்.கஜன் முகர்சிங்கும் வாசிப்பார்.

★ ★ ★

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நாவலர் மணி மண்டபத்தில் நடாத்தி வரும் முத்தமிழ் நிகழ்வுகளில் மாலை 7 மணிக்கு கவிமணி க.ஆனந்தராசாவின்' 'கந்தன கனியமுதம்' எனும் தலைப்பிலான கவிதா நிகழ்வு இடம்பெறவுள்ளது.

★ ★ ★

நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீமுத்து விநாயகர் ஆலய ம்ண்டபத்தில நடைபெற்றுவரும் கம்பராமாயண தெய்வீக தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6 மணிக்கு 'இன்று போய் நாளை வா' எனும் தலைப்பில் பேருரை இடம்பெறவுள்ளது.

★ ★ ★

நல்லூர் வடகிழக்கு வீதி ஸ்ரீ மனோன்மணி அம்பாள்தேவஸ்தானத்தில் மாலை 7 மணிக்கு கலாநிதி பிரம்மஸ்ரீ கு.சிவராஜ சர்மா வழங்கும் தெய்வீகப் பேருரையில் இன்று 'சூரன் ஆலோசனை' எனும் தலைப்பில் இசைப்பேருரை இடம் பெறும். (ரு-7)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

**என் மகனே ! மரணம் நேருவதைத் தடுக்க முடியாது. எனவே கற்களைப் போலவும் கட்டைகளைப் போலவும் செத்து மடிவதை விட வீரர்களைப் போல் இறப்பது மேலானது அல்லவா? அதிலும் குறிப்பாக மற்றவர்களுக்கு ஒரு சிறிதளவிற்கு நன்மை செய்வதற்காக அழிந்து போவது மிகவும் நல்லது.**

சுவாமி விவேகானந்தர்

# போதிய குற்றவிசாரணை அதிகாரிகள் இன்மையே இலங்கையில் குற்றச்செயல் அதிகரிப்புக்கு காரணம்

## ஆசிய மனிதவுரிமை ஆணைக்குழு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் குற்றச்செயல்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் அதிகாரிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகக் காணப்படுவதாக ஆசிய மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாகவே குற்றச்செயல்களும் குற்றவாளிகள் மீது மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல்களும் இலங்கையில் அதிகரித்துவருவதாகவும் அந்த ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

குற்றச்செயல் குறித்த விசாரணை அதிகாரிகளின் எண்ணிக்கையினை அதிகரிப்பது தொடர்பாக அரசாங்கம் அசமந்தப் போக்குடன் செயற்பட்டுவருகிறது.

எனினும் ஊடகங்களும், பொது அமைப்புக்களும் இது விடயம் குறித்து அழுத்தம் கொடுத்தால் அரசாங்கம் இது தொடர்பில் நீண்ட காலத்திற்கு அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்கமுடியாது நடவடிக்கை எடுக்கும்.

அதேவேளை, சிறைக்கைதிகள் மீது பொலிஸார் மேற்கொண்டுவரும் வன்முறை கலந்த விசாரணைகளுக்கு எதிராகப் பொது மக்கள் கவனம் செலுத்தத் தவறிவருகின்றனர்.

தகுதிவாய்ந்த மேலதிக விசாரணை அதிகாரிகளை சேவையில் அமர்த்துவதற்கும், சேவையிலுள்ள அதிகாரிகளுக்கு மேலதிகப் பயிற்சிகளை வழங்குவதற்கும் அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஆசிய மனிதஉரிமை ஆணைக்குழு மேலும் வலியுறுத்தியுள்ளது (ற-121)

## யாழ். பஸ்நிலையத்தில் பெண்களை மிரட்டியவர்கள் மக்களால் நையப்புடைப்பு

(யாழ்ப்பாணம்)

கத்தியைக் காட்டி பெண்களை மிரட்டிய இரு இளைஞர்களை மக்கள் மடக்கிப் பிடித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் யாழ். பஸ் நிலையத்தில் இச் சம்பவம் இடம்பெற்றது.

பஸ்சிற்காக காத்திருந்த இரு பெண்களை பிரஸ்தாப இளைஞர்கள் கத்தியைக் காட்டி மிரட்டியதுடன் சேஷ்டைபுரிய முற்பட்டனர்.

அதன்போது அவர்களை அந்தப் பெண்கள் ஏசினர். இதனையடுத்து நிலைமையை விளங்கிக்கொண்ட மக்கள் அவர்கள் இருவரையும் மடக்கிப் பிடித்து நையப்புடைத்த பின் யாழ்.பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (ச-19,50)

## கிணற்றில் வீழ்ந்து மரணம்

(மீசாலை)

மீசாலையில் நேற்று தண்ணீர் அள்ளுவதற்காக கிணற்றடிக்குச் சென்ற வயோதிபப் பெண் கிணற்றில் தவறி வீழ்ந்து மரணமானார்.

இச் சம்பவத்தில் மீசாலை, வங்களாவடியைச் சேர்ந்த கந்தசாமி புனிதவதி (வயது 67) என்ற வயோதிபப் பெண்ணே மரணமானவராவார். (இ-115)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் எதிர்வரும் 17,18 ஆம் திகதிகளில் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தலைமையில் யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கூட்டத்தில் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனும், செயலக திட்டமிடல் பணிப்பாளர்களும், நிர்வாக உத்தியோகத்தர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அரசின் வரவு, செலவுத் திட்டத்தின் கீழ், வருடாந்தம் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தலா 50 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றமை தெரிந்ததே. (க-5)

## 3 ஆம் கட்டையில் வாகன விபத்து

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு 3 ஆம் கட்டைச் சந்தியில் நேற்று மாலை மினி பஸ்ஸும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் காயமடைந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த மினிபஸ்ஸும் 3 ஆம் கட்டை கலைமணி வீதியிலிருந்து பருத்தித்துறை பிரதான வீதிக்கு ஏறிய மோட்டார் சைக்கிளுமே மோதி விபத்துக்குள்ளானது.

இச்சம்பவத்தையடுத்து அங்கு திரண்டசிலர் மினிபஸ்ஸின் கண்ணாடிகளை அடித்து நொருக்கிச் சேதப்படுத்தினர்.

இதனால் பஸ்ஸின் சாரதி அங்கிருந்த தப்பியோடினார். (இ-106)

# விடுதலைப் புலிகளின் யோசனைகளுக்கு பேச்சுவார்த்தையின் பின்னரே பதில்!

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகிய பின்னரே, தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபை குறித்த யோசனைகளை அரசு ஏற்றுக்கொள்ளுமா? இல்லையா? என்பதை அறிவிக்கமுடியுமென ஆற்றுப்பள்ளத்தாக்கு ராஜரட்ட அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசாங்கம். சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் துரிதமாக மேற்கொண்டு வருகின்றது.

ஆனால், இடைக்கால நிர்வாகசபை குறித்து அரசு பேசமுன்வந்தால் மட்டுமே பேச்சுவார்த்தைக்கு நாம் செல்வோம் என விடுதலைப் புலிகள் ஒற்றைக்காலில் நிற்கின்றார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது இடைக்கால நிர்வாகசபை குறித்த யோசனைகளை பேச்சுவார்த்தை மேசையில் பேசுவதற்கு அரசு எவ்வித தடையும் விதிக்கவில்லை.

அவர்கள் அவ்வாறு தமது யோசனைகளின் கருத்துக்களை பேச்சுவார்த்தை மேசையில் முன்வைப்பார்களாயின், அதனை ஜனாதிபதி தலைமையிலான விசேட குழு ஆராயும்.

அதேவேளை இது விடயம் குறித்த அரசின் பதில் யோசனைகளையும் இக் குழு ஆராயும்.

இவ்வாறு இரு தரப்பினராலும் முன்வைக்கப்படும் யோசனைகளை நன்கு ஆராய்ந்து, அதில் ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயங்களை இவ்விசேட குழு அரசின் ஊடாக விடுதலைப் புலிகளுக்கு தெரிவிக்கும் என்றார். (க-61)

## தேசிய ஆலோசனை சபை...

தடைப்பட்டுள்ள விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்குடன் கடந்த வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது அலுவலகத்திற்கு அழைத்து நீண்டநேர கருத்துப் பரிமாறல்களுக்கிடையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தேசிய ஆலோசனைசபை அமைக்கும் யோசனை வெளியிட்டிருந்தார்.

இந்த யோசனைகளின் பிரகாரம், தேசிய நலன்கள் பற்றிய விடயங்களில் சகல அரசியல் கட்சிகள், மதத் தலைவர்கள், சிவில் சமூகக் குழுக்கள் போன்ற பலதரப்பினருடனும் ஆலோசிக்கும் வகையிலேலே தேசிய ஆலோசனைசபை அமைக்கப்படவேண்டும் என்று ஜனாதிபதி, ரணிலுக்கு விளக்கமளித்திருந்தார்.

இரண்டுதசாப்த காலமாக இடம்பெற்றுவரும் இனப்போரை முடிவுக்குக் கொண்டுவந்து, நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு சகல அரசியல் கட்சித் தலைவர்களும் முன்வருவதற்கு அமைக்கப்படவிருக்கும் தேசிய ஆலோசனைசபை இடமளிக்குமென்று அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகள் கருத்துத் தெரிவிப்பதுடன் ஜனாதிபதியின் யோசனையையும் பாராட்டியுள்ளனர்.

ஜனாதிபதியின் இந்த யோசனைக்கு ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்களும், கட்சியின் தலைமைக்கெதிராகப் போர்க்கொடி தூக்கி நிற்கும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது பூரண ஆதரவைத் தெரிவித்திருப்பதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்திருப்பதுடன், மாறிமாறி ஆட்சியைக் கைப்பற்றும் கட்சிகள் ஒன்றை ஒன்று குறைகூறி இனவாதம் பேசுவதற்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படுமெனவும் சுட்டிக்காட்டியுள்ளன.

அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சவார்த்தையை ஆரம்பித்தால் மட்டுமே இலங்கைக்கு கடன்உதவி வழங்கப்படும் என்று உறுதியளித்த நாடுகளுக்கு, ஜனாதிபதியின் தேசிய ஆலோசனைச் சபை அமைக்கும் யோசனை ஊக்கமளிக்கும் நடவடிக்கையாக அமைத்துள்ளதாக இலங்கையிலுள்ள கடன் வழங்கும் நாடுகளின் இராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே உள்ள முறுகல்நிலையைத் தவிர்த்து மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் நோக்குடன் நாளை இலங்கை வரும் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் நாளை மறுதினம் கிளிநொச்சியில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திக்கவுள்ள நிலையில் ஜனாதிபதி சந்திரிகா முன்வைத்துள்ள தேசிய ஆலோசனைசபை அமைக்கும் யோசனைபற்றியும் தமிழ்ச்செல்வனிடம் பிரஸ்தாபிப்பார் என்று நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, தேசிய ஆலோசனைச் சபைக்கு தென்னிலங்கையில் ஆதரவு பெருகிவருவதனால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. தனது கடும்போக்கை மாற்றி ஜனாதிபதியின் யோசனைக்கு ஆதரவைத் தெரிவிப்பர் என்றும், தற்போது அரசில் இணைந்து அமைச்சுப் பொறுப்புக்களைப் பெற்றிருக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவு அரசுக்கு இருப்பதனால் அரசு தனது பெரும்பான்மைப் பலத்துடன் தேசிய ஆலோசனை சபையை அமைக்கும் யோசனையில் வெற்றிபெறும் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ம)

## ஜப்பான் தூதுவர்...

ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக தெரிய வருகிறது.

எரிக்சொல்ஹெய்மின் கொழும்பு விஜயத்தை கதிர்காமருக்கு ஞாபகப்படுத்திய அகாஷி, தானும் அடுத்தகட்ட நடவடிக்கையாக கொழும்பு வரவுள்ளதாகத் தெரிவித்தார்.

கதிர்காமரின் கருத்துக்கள் அனைத்தையும் கவனமாக செவிமடுத்த அகாஷி விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுடனும் சந்திப்புக்களை நடாத்தவிருப்பதாகவும், நாட்டின் நலனுக்காக ஜே.வி.பி. தனது நிலையிலிருந்து சற்று இறங்கிவரும் எனத் தான் எதிர்பார்ப்பதாகவும் அகாஷி தெரிவித்தார். (இ-121-06)

## கனடாவில்...

பொங்குதமிழ் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், ஜோசப்பரராசசிங்கம் ஆகியோரும், பொங்குதமிழாளர், விரிவுரையாளர் கலாநிதி சிதம்பரநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம)

## தேசிய சமாதானப் பேரவை ஏற்பாட்டில் தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் இன்று வடபகுதிக்கு வருகைதருகின்றனர்

(கொழும்பு)

தென்னிலங்கையைச் சேர்ந்த 40 ஊடகவியலாளர்கள் ஐந்து நாள் பயணத்தை மேற்கொண்டு இன்று வடபகுதிக்கு விஜயம் செய்கின்றனர்.

வடபகுதிக்கு வரும் இவர்கள் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆராய்வதுடன், பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

ஊடகவியலாளர் குழுவினர் முதல் இரண்டு நாட்கள் கிளிநொச்சியில் தங்கியிருந்து வன்னிப்பகுதியில் பல்வேறு இடங்களையும் சென்று பார்வையிடுவதுடன், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சுப.தமிழ்ச்செல்வனையும் சந்திக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் வரும் இவர்கள் பல்வேறுபட்ட சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

இவர்களின் பயணத்தை தேசிய சமாதானத்திற்கான பேரவை ஏற்பாடு செய்துள்ளது. (க-8)

# மிலேனியம் சிற்றி அறிக்கையில் பல தவறுகள் உள்ளனவாம்!

## இராணுவ அதிகாரி மனுத்தாக்கல்

(கொழும்பு)

அத்துருகிரிய மிலேனியம் சிற்றி வீடமைப்புத் தொகுதியில் உள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவில் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையில் சில கருத்துக்களை ரத்துச்செய்வதற்கான உத்தரவினைப் பிறப்பிக்குமாறுகோரி இராணுவ அதிகாரியான கேணல் தயா பராக்கிரம திஸாநாயக்க மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

அத்துருகிரிய மிலேனியம் சிற்றி இராணுவப் புலனாய்வுப் பிரிவு குறித்த தகவல்களைத் தாம் சேகரித்ததாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவர் அவ்வாறு எந்தத் தகவல்களையும் சேகரிக்கவில்லை.

எனவே, அந்த அறிக்கை தொடர்பாக இராணுவச் சட்ட திட்டங்களுக்கு அமைவாக ஒழுக்காற்று நடவடிக்கைகளும் இடம்பெறவுள்ளதாக மனுதாரர் அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில சரத்துக்களை ரத்துசெய்வதற்கான உத்தரவினை சமர்பிக்குமாறுகோரி மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இம்மனுவில் பிரதிவாதியாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் டி.ஜெயவிக்கிரம குறிப்பிடப்பட்டுள்ளார். (க-8)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.09.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.